விலை ரூபா 1-00

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 கார்த்திகை 3 ஸபர் 2 இதழ் 279

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 19—11—82

அலஸ் ஆணைக்குழு விசாரணை:

# சம்பவம் பற்றி வழக்கு தாக்கல் செய்யவில்லை''

## உதவி இன்ஸ்பெக்டர் சாட்சியம்

(காலி)

பீட்டர் எனது நண்பர் அவர் வீட்டிற்குக் கல்லெறிய வில்லை பீட்டர் வீட்டிற்குக் கல் எறியப்பட்டதாக கேள்விப்பட்டேன்'' அலஸ் விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளித்த முகமத் பலின் முகமத் மேற்கண்டவாறு கூறினர்.

காலி குடும்ப நீதிமன்றக் கட்டடத்தில் விசாரணை நடைபெற்றது.

முஸ்தபா முகமத் சாட்சியமளிக்கையில், சலூனுக்குப் போத்தலால் அடித்தது பற்றி தெரியாதென்றும், தான் அங்கொடைக்குச் சென்றது தெரியாதென்றும் கூறினர்.

காலி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு உதவி இன்ஸ்பெக்டர் திரு. கே. பி.

[8-ம் பக்கம் பார்க்க]

## ★ யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள்

# வகுப்புகளைப் பகிஷ்கரித்து மௌன ஊர்வலம் நடத்தினர்!

(யாழ்ப்பாணம்)

''மதகுருமாரை விடுதலை செய்யவேண்டும்; பயங்கரவாத தடைச்சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும்' என்று கோரும் சுலோக அட்டைகளைத் தாங்கி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் நேற்றுக்காலை தங்களது வகுப்புக்களைப் பகிஷ்கரித்து பொது வீதிகள் வழியாக மௌன ஊர்வலம் நடத்தினர்.

இந்த அடையாள மௌன ஊர்வலத்தின்போது மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டனர். ஊர்வலத்தைத் தொடர்ந்து கண்டனக் கூட்டமும் நடைபெற்றது.

யாழ் பல்கலைக் கழக மாணவர் அவைத்தலைவர் திரு கு. ந. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் விஞ்ஞான, மருத்துவ துறைகலை, கலைப்பீடங்களைச் சேர்ந்த சுமார் 2 200 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

யாழ் பல்கலைக் கழக இராமநாதன் மண்டபத்திலிருந்து காலை 9-30க்கு ஊர்வலமாகப் புறப்பட்டமாணவர்கள்பலாலி வீதிஊடாக கந்தர்மடம் சந்தியைஅடைந்து, பின்னர் அரசடி வீதி, காங்கேசன்துறை வீதிவழியாக நாச்சிமார்கோவிலடியைச் சென்றடைந்து காலை 12-00க்கு திரும்பவும் இராமநாதன் மண்டபத்தை அடைந்தனர். இதனைத் தொடர்ந்து விளையாட்டுத்திடலில் கூட்டம் நடைபெற்றது. மாணவர் அவைத் தலைவர் உரையாற்றினார்.

பின்வரும் சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் மாணவர்கள் மௌனமாகஊர்வலத்தில் சென்றது குறிப்பிடத்தக்கது.

''மதகுருமாரை விடுதலை செய்யவேண்டும்''

''பயங்கரவாத தடைச் சட்டம் உடன் நீக்கப்படவேண்டும்''

''தமிழினவிடுதலையை அங்கீகரிக்கவேண்டும்''

''இளைஞர்கள், மாணவர்களுக்கெதிரான சித்திரவதைகளை உடன்நிறுத்தவேண்டும்''

(மா)

## கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''இராணுவத்தினராலும் பொலிசாராலும் கத்தோலிக்க குருமார் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் படுவதை வன்மையாக கண்டிப்பதாக'' யாழ் பல்கலைக் கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''கத்தோலிக்க குருமாரின் இருப்பிடத்தை அநாகரீகமான முறையில் இராணுவத்தினரும் பொலிசாரும் அத்துமீறிப் பிரவேசித்தமை;

''கத்தோலிக்க உயர்பீட அதிகாரமின்றி இராணுவ முகாமிற்குக் குருமார் கொண்டு செல்லப்பட்டமை,

''தொடர்ந்து 3 நாட்களாக எவ்வித ஓய்வு உறக்கமின்றி

(8-ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி பொலிஸ் நிலைய வளவைச் சுற்றி ஆறு அடி உயர கம்பிவேலி!

(மட்டுவில்)

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையம் பாரிய பந்தோபஸ்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது

பொலிஸ் நிலைய வளவைச் சுற்றி சுமார் ஆறுஅடி உயரமான கம்பிவேலி போடப்பட்டு நெருக்கமாக கம்பியடிக்கப்பட்டுள்ளது. ஒரே ஒரு நுழைவாயில் மட்டும் வைத்து அதற்கும் மிகவும் பாதுகாப்பான கதவு போடப்பட்டுள்ளது. இவற்றுடன் தொலைபேசி வயர்லெஸ் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்தும் புதிதாக வரவழைக்கப்பட்டுள்ளது பொலிஸ் நிலையத்தைச்சுற்றி மண்மூடைகளும் அடுக்கிவைக்கப்பட்டுள்ளன.

## ஜனாதிபதிக்கு சிறிமாவோ கடிதம்

(கொழும்பு)

பனாகொடை இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி செயலாளர் திரு இரத்தினசிறி விக்கிரமநாயக்காவை விடுதலை செய்யுமாறு கோரி ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜயவர்த்தனாவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடிதம் எழுதியுள்ளார்.

திரு. விக்கிரமநாயக்கா, பங்கீட்டுக்கூப்பன் புத்தக மோசடி சம்பந்தமாக விசாரணைசெய்யப்பட்டு பனாகொடை இராணுவமுகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

## சந்தேகநபர் பிணையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த தம்பாபிள்ளை சுட்டுக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஆ. பாலசுப்பிரமணியம் மல்லாகம் மாவட்ட பதில் நீதிபதி கே. குணரத்தினம் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டபோது 1000 ரூபா சரீரப்பிணையில் செல்லுமாறும் நீதிமன்றம் அழைக்கும்போது மீண்டும் ஆஜராகவேண்டும் என்றும் உத்தரவிட்டார்

காரைநகரைச்சேர்ந்த இவர்

[8-ம் பக்கம் பார்க்க]

## பொலிஸ் நிலையங்களுக்கிடையே நேரடித் தொலைபேசிச் சேவை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குமிடையே நேரடித் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு கட்டமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இதே நேரத்தில் யாழ்ப்பா

(8-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிகல்விஅபிவிருத்தி ரூபா 14 லட்சம் ஒதுக்கீடு

[கிளிநொச்சி]

கிளிநொச்சித் தொகுதியின் கல்வி அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு 23 பாடசாலைகளுக்கு கட்டிட வசதிகளை ஏற்படுத்துமுகமாக பன்முக வரவு செலவு திட்டத்தின்கீழ் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி 14 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்

இவற்றில் இப்பகுதியின் பிரதான பாடசாலைகளான கிளிநொச்சி முதலாம்தர மகா வித்தியாலயத்திற்கு 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும், 7ம் வாய்க்கால் இருந்து மகா வித்தியாலயத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும், சென் திரேசா மகளிர் வித்தியாலயத்திற்கு 84 ஆயிரம் ரூபாவும், பூநகரி மகாவித்தியாலயத்திற்கு 68 ஆயிரம் ரூபாவும், பளை மகா வித்தியாலயத்திற்கு 68ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## வண. சிங்கராயரை சட்டத்தரணி பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

குருநகர் இராணுவ முகாமில் கடந்த ஐந்து நாட்களாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் வண பிதா ஆ.சிங்கராயர் அடிகளாரை முகாமில் பார்ப்பதற்கு, சட்டத்தரணி சேவியர் நேற்று அனுமதிக்கப்பட்டிருந்தார்.

# வரி விளம்பரம்

## தேவை

அனுபவம் வாய்ந்த மெக்கானிக், எலக்றிஷன் தேவை. உடனடியாக நேரில் வரவும். 120, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 5193

அனுபவமுடைய கொம்பசிட்டர், பிளேற்றின் மெசின் மைன்டர் தேவை. உடன் நேரில் வரவும். சித்திரா அச்சகம், 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 5201

தனியார்கல்விநிறுவனத்தை மேற்பார்வை செய்யக் கூடிய ஒருவர் (ஆண்) தேவை. வயது 45க்கு மேல். இதே கல்வி நிலையத்தில் காசாளராகக் கடமையாற்றக்கூடிய பெண் காசாளரும்தேவை. 2?–11–82 திங்கள் பிற்பகல் 2 மணிக்கு நேரில் வரவும். Science Academy, 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 5212

## விற்பனைக்கு

பிரதான வீதிக்கு அண்மையில், 2ம் குறுக்குத் தெருவில், நல்ல நீள்சதுரமான 1¼பரப்பு 1 குளி காணி தனிப்பாதையுடன், உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 18, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 5200

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை மேற்கு, 99, நாவலர் வீதி காலஞ்சென்ற முகம்மது அப்துல்காதர் முகம்மது மீரா மொகித்தீன் என்பவரது மரணசாதனத்தினதும் எழுத்தாவணத்தினதும் விடயத்தில்.

(மரணமெய்தியவர்)

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. T/ 3691

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை மேற்கு, ஐந்து ரூஸ் மக்கம்வீதி, இல 6, எம். ஏ. ஸி. முகம்மது மீரா மொகித்தீன் கைம்பெண் துஜானு.

—மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1982ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாகக்கப்படலாகாது எனபதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றின் ஆணைப்படி,
தா. குலஞானம்,
பதிவாளர்.

1982ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ம் திகதி.

வரைந்தவர்
C. C சோமசேகரம்,
மனுதாரின் சட்டத்தரணி.
5214

## விற்பனைக்கு

மாங்குளத்திற்கு அருகாமையில் பிரதான வீதியில் ஐந்து தொடர்மாடிக் கட்டிடத்துடன், இரண்டாயிரம் (2000) புசல் அரசாங்க கோட்டா அரிசி ஆலை சகல வசதியுடன் ஐந்து ஏக்கர் காணியில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 131, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5215

பளையிலிருந்து மூன்று மைல் தூரத்தில் 70 ஏக்கர் தென்னந் தோட்டம் (மாசார்) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: 10, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
5210

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் பிரயோசனங்களுடன் சகல வசதிகளும் கிடைக்கக் கூடிய கேந்திர ஸ்தானத்தில், 60 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வாங்க விரும்புபவர்கள், தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்: மலிரி சேவிசஸ், டன்லப் ஸ்ரோர்ஸ், 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
5180

யாழ். மாநகரசபை எல்லைக்குள் புதிய சோனக தெருவில் 35பரப்புகாணி முழுதாகவோ, துண்டுகளாகவோ விற்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பரஇல: 5077, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5077

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## நுகர்ச்சி முகாமையாளர் பதவி வெற்றிடம்

மேற் காட்டப்பட்ட பதவிக்கு விண்ணப்பங்கள்கோரப் பெறுகின்றது. (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு வர்த்தமானிக்கு அமைவாக)

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித்திகதி 29–11–82 விண்ணப்பங்கள் யாவும் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பத்திலேயே நிரப்பப்படல் வேண்டும். தேவையான விபரங்களை கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுத்துமூலமாகவோ, அல்லது நேரடியாகவோ வந்துபெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெறவேண்டின் முத்திரை ஒட்டப்பட்ட சொந்த முகவரி இடப்பட்ட கடிதஉறை அனுப்பப்படல் வேண்டுமென்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.
சங்கானை ப.நோ.கூ.சங்கம்,
சங்கானை.
17–11–82. 5209

## ''ராகிங்கை கைவிடவேண்டும்''

— ஜனதிபதி

(கொழும்பு)

''நமது கலாச்சாரத்துக்கு ஒத்து வராத 'ராகிங்கை' பல்கலைக் கழக மாணவர்கள் கைவிடவேண்டும். புதிய மாணவர்களைச் சமமாக நடாத்தப் பழக வேண்டும்'' என்று ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கொழும்பு பண்டாரநாயக்கா மகா நாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மகா பொல புலமைப்பரிசில்கள் வழங்கும் விழாவில் பேசுகையில குறிப்பிட்டார்.

## ஸ்கந்தஷஷ்டி திருவிழா

யாழ்ப்பாணம்]

வண்ணை ஈழத்துச் திருச்செந்தூர் ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில் ஸ்கந்தஷஷ்டியை முன்னிட்டு தினமும் திருச்செந்தூர் புராண படனமும் முருகனுக்கு சந்தனக் காப்பு அலங்காரமும் நடைபெறுகிறது.

தினமும் காலையில் ஸ்நபனபிஷேகமும், பூசையும் தொடர்ந்து புராண படனமும் மாலையில் சத்தனக் காப்புடன் நியாசபூர்வஷண் முகார்ச்சனையும், வசந்த மண்டப பூசையும் சுவாமி உள் வீதி வலம் வருதலும் நிகழுகின்றன

இம்மாதம் 16ந் திகதி முதல் 21ம் திகதி வரை நடைபெறும் ஸ்கந்தஷஷ்டி விழாவினை அடுத்து 22ம் திகதி திங்கள் விசேட நிகழ்ச்சியாக கதிர்வேலாயுத சுவாமியின் திருக்கல்யாணமும் வள்ளி தேவசேனு சமேதராக வெளி வீதி வலம் வருதலும் நடைபெறும். [உ]

## இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 3ம் திகதி

வெள்ளிக்கிழமை

(19—11—82)

மேடம்: தாம்பத்தியவாழ்வில் அன்பு தவழும், வாழ்க்கையின் தரமும் உயரும், காதலர்கள் வாழ்வில் கர்கண்டான நாள். புத்திரர் புகழும் உண்டு.

இடபம்: பூமிப் பிணக்குகளால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். வாகனம் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவேண்டும், எதிலும் உணர்ச்சி வசப்படாது இருக்கவும்.

மிதுனம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. காதலர்கள் வாழ்க்கையில் தித்திப்பான சம்பவங்கள் இடம் பெறும், புத்திரவழியால் மகிழ்ச்சியும் உண்டு.

கடகம்: நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும், வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம், பொருட் செலவு உண்டு.

சிங்கம்: தொழில்துறையில் நன்மை ஏற்படும், பிதா வழியால் ஆதரவும் உண்டு, கொள்கைவழி வாழ்க்கையை அமைப்பதில் மகிழ்ச்சி அடைவீர்கள்.

கன்னி: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும், ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும், சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம், பிரயாணத்தின்போது மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும்.

துலாம்: கரதலர்களுக்கு கனகுஷியான தினம், பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும், இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம பெறும், இன்று சுபதினம்.

விருச்சிகம்: முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும், கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடன்பட நேரிடலாம். நண்பர்களாலும் நஷ்டமடைவீர்கள்.

தனுசு: அன்னியவாசம் அமைதிக்கு உலைவைக்கும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும், தெய்வநம்பிக்கை சிறந்த பயன் தரும்.

மகரம்; வார்த்தை ஜாலம் செய்வதன் மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள், எழுத்தாளர்களுக்குச் சிறப்பான தினம். இருக்கும் இடத்தில் ஆதரவு பெருகும், சிலருக்கு பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம்.

கும்பம்: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும், அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர், கடற்றொழிலாளர்கள் கவனம் செலுத்தவும், சிலருக்குநூதன ரோகம் தென்படலாம்.

மீனம்: மாதுருவழிப் பெருமைக்கு இடமுண்டு, மனம் போல் யாவும் நடக்கும், இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


கலைவாணி சனசமூக நிலையம்
பாவலர் வீதி, தெல்லிப்பழை.
மேற்படி நிலையத்தில் 14–11–82இல் (தீபாவளி தினம்)
நடைபெறவிருந்த
அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு
14-1-83இல் (தைப்பொங்கல் தினம்)
நடைபெறும் என அறியத்தருகின்றோம்.
நிர்வாகசபையினர்.
(5205)



அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

உடுப்பிட்டி சனசமூக நிலையத்தால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்.

| | |
|---|---|
| 1–வது பரிசு: 429, | 2–வது பரிசு: 1529, |
| 3–வது பரிசு: 4580 | 4–வது பரிசு: 3706 |
| 5–வது பரிசு: 1829 | 6–வது பரிசு: 3456 |
| 7–வது பரிசு: 1550 | 8–வது பரிசு: 2563 |

இப்பரிசுகளுக்குரியவர்கள் தங்கள் ரிக்கற்றுகளை 15 நாட்களுக்குள் சமர்ப்பித்து பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்.

வே. சந்திரகாந்தன், செயலாளர்.
வ. வர்ணகுலசிங்கம், தலைவர்.
(5204)



யாழ்ப்பாண பாடசாலைகள்
விளையாட்டுச் சங்கம்
உதைபந்தாட்டப் போட்டி
கால் இறுதிப் போட்டிகள்
20-11-82 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு
ஆரம்பமாகும்.
மைதானம்:
யாழ். துரையப்பா விளையாட்டரங்கு
க. மு. சா. ஹமீட்,
உதைபந்தாட்டச் செயலாளர்.
ஒஸ்மானியாக் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
18–11–82. (5216)



மீட்கப்படாத அடைவுப் பொருட்களின்
ஏல விற்பனை
மக்கள் வங்கி நெல்லியடிக் கிளையில்
1980-ம் ஆண்டு ஆவணி மாதம் 06-ந் திகதி வரை
அடைவு வைக்கப்பட்டு 1982-ம் ஆண்டு
டிசம்பர் மாதம் 03-ந் திகதி வரை மீட்கப்படாத
நகைகள் யாவும்
1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05-ந் திகதி
காலை 10-00 மணியளவில் நெல்லியடி
மக்கள் வங்கிக் கிளைக் கட்டிடத்தில் வைத்துப்
பகிரங்க ஏலத்தில்
விற்பனை செய்யப்படும் என்பதனை
அறியத்தருகின்றோம்-
பிரதேச முகாமையாளர்.
மக்கள் வங்கி,
பிரதேச தலைமைக்காரியாலயம்,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
05-11-1982. (5096)


## கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

மாதகல் மேற்கு சன சமூக நிலையத்தினர், அண்மையில் மாதகலுக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் மாதகல் மேற்கு மக்களின் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வரும் மின்சார சீர்கேடு காரணமாக புதிய மின்மாற்றியை மாதகல் மேற்கு கிராமத்திற்கு பொருத்தும்படி கோரிக்கை விடுத்தனர்.

## திருக்கோவில் வங்கிக் கொள்ளை வழக்கு

(கொழும்பு)

திருக்கோவில் வங்கிக் கொள்ளை வழக்கு விசாரணை அடுத்தவருடம் ஜனவரிமாதம் இருபதாம் திகதி நடைபெறும்.

இவ்வழக்கில் தேவ ஆனந்தன், தேவகுமார், பாஸ்கரன் ஆகியோர் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர். (இ

# போலந்தில் இராணுவச்சட்டம் வாபஸ்பெறப்படவேண்டும்

## தொழிற்சங்க சம்மேளனம் கோரிக்கை

வார்ஸோ, நவ. 18

"தொழிற்சங்கநடவடிக்கை களுக்காகத் தண்டனை விதிக் கப்பட்டவர்களுக்கும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர் களுக்கும் போலந்து அரசாங் கம் மன்னிப்பு வழங்க வேண் டும். போலந்தில் இராணுவச் சட்டம் வாபஸ்பெறப்பட வேண்டும்.

இவ்வாறு சுதந்திர சர்வதேச தொழிற்சங்க சம்மேளனம் போலந்தின் இராணுவ ஆட்சி யாளர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

1981 டிசம்பருக்குப் பின் நாட் டில் பலர் தொழிற்சங்க நட வடிக்கைகளுக்காகத் தடுப்புக் காவலில் காலவரையறை யின்றி வைக்கப்பட்டு கொடு மைப்படுத்தப்படுவதாகவும், மனிதாபிமானமற்ற தண்டனை களுக்கு உட்படுத்தப்படுவ தாகவும் மேற்படிசம்மேளனத் துக்குக் கிடைத்த முறையீடு களை அடுத்தே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சம்மே ளனத் தலைவர் கூறினார்.

போலந்தின் தொழில்துறை களின் அமைச்சரினால் இரகசிய மாகத் தயாரிக்கப்பட்ட அறிக் கையை சுதந்திர சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத் தின் பொதுச்சபையில் சமர்ப் பிக்க தொழிற்துறைகளின் அமைச்சர் சம்மதித்துள்ளார்.

# முல்லைத்தீவு தேசிய இளைஞர்மன்ற திட்டங்கள் செயலாகின்றன

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தேசிய இளை ஞர்கள் சேவை மன்றம் முல் லைத்தீவுப் பகுதி கிராமங்களில் சிறு கைத்தொழிற் பயிற்சிகள் கொடுப்பதற்கான திட்டங் களைச் செயல்படுத்தி வரு கிறது

இது தொடர்பான பயிற்சி வகுப்பொன்று வற்றாப்பளைக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட் டுள்ளது தேசிய இளைஞர் மன்ற வற்றாப்பளைக் கிளையின் உதவியுடன் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புகள் வற்றாப் பளை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடை பெற்று வருகின்றன.

இப்பயிற்சி வகுப்புகளில் வற்றாப்பளை, மாமூபளை ஆகிய பகுதி களைச் சேர்ந்த பெண்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் வேலை யற்ற படித்த பெண்கள் 25 பேர் பயிற்சி பெற்று வருகின் றனர். தையல் பயிற்சி, பிளாஸ்ரிக் பின்னல்ப்பயிற்சி, பனம்பொருள் உற்பத்திப் பயிற்சி ஆகிய பயிற்சிகள் இந்த நிலையத்தில் பயிற்றப் பட்டுவருகின்றன.

# விநோபாஜி அஸ்தி ஆசிரமத்தில்

புதுடில்லி, நவ. 18

பூதான இயக்கத் தலைவரும், சர்வோதய சமாஜ் ஸ்தாப கரும், இந்தியாவின் முதிர்ந்த காந்தியவாதியுமான அமரர் ஆச்சார்ய விநோபாபாவே யின் பூதவுடல் நேற்றுமுன் தினம் புதுடில்லியிலிருந்து 300 மைல் தூரத்திலுள்ள பவு னர் ஆச்சிரமத்தின் அருகே உள்ள காந்தி காட்டில் தகனம் செய்யப்பட்டது.

ஆச்சிரமத்திலிருந்து காந்தி காட்டுக்கு பூதவுடல் மலர்ப் படுக்கையில் வைத்து, இளைய சகோதரர் திரு ஜிவாஜிராவ் உட்படப் பல பிரமுகர்களால் சுமந்துசெல்லப்பட்டது. காந்தி காட்டில், வளர்ப்பு மகள் மகா தேவி நிர்மலாதேஷ் பண்டே விநோபாவேஜியின் சிதைக்குத் தீ மூட்டினர்.

ஆச்சார்ய விநோபாஜியின் விருப்பப்படி, பவுனர் ஆச்சிர மத்தில் அவர் உறங்கிவந்த கட்டிலின் அடியில் அஸ்தி புதைக்கப்படவுள்ளது

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பவுனர் ஆச் சிரமத்தில் மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி அவரது பூதவுடல் அருகே சில நிமிடம் சோக மாக அமர்ந்திருந்தார். விநோ பாஜி பற்றி பிரதமர் இந்திரா காந்தி அங்கு கருத்துவெளியிடு கையில் "ஆச்சார்ய விநோபா பாவேஜி பெரும் சந்நியாசி, மகாத்மா" என்றார்.

விநோபாஜியின் இறுதி ஊர் வலத்தில் பிரதமர் இந்திரா காந்தி உட்பட மத்திய அரசின் அமைச்சர்கள், மாநில முதல மைச்சர்கள், மாநில அமைச் சர்கள், அரசியல் கட்சித் தலை வர்கள், சர்வோதயத் தொண் டர்கள், விநோபாஜியின் ஆச் சிரமவாசிகள் உட்பட பெருந் தொகையான பொதுமக்களும் கலந்து கொண்டனர். [உ]

## நாகலாந்தில் இ. காங்கிரஸ்

புதுடில்லி, நவ, 18

இந்திரா காங்கிரஸ், நாக லாந்து மாநில அரசாங்கத்தை அமைத்துள்ளது.

மாநில முதலமைச்சராக 51 வயதுடைய முன்னாள் அமைச்ச ராக இருந்த திரு. ஜமீர் பதவி ஏற்றுள்ளார்.

இந்திராகாங்கிரஸ் சுயே ச்சை உறுப்பினர்களை இணை த்து அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளதை அடுத்தே மாநில அரசாங்கம் அமைக்கப் பட்டுள்ளது. (உ)

## அகாலிகள் கிளர்ச்சி மறுபரிசீலனை

புதுடில்லி, நவ, 18

புதுடில்லியில் நடைபெறும் 9வது ஆசிய விளையாட்டை முன்வைத்து அகாலிகள் கிளர் ச்சி செய்ய எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்யவுள்ள தாக அகாலிகள் தலைவர் நேற் று தெரிவித்துள்ளார்.

மத்திய அரசுடன் அகாலி கள் இணைந்து சமுக உறவினை ஏற்படுத்திஇத்துறைப்பதையே விரும்புவதாகவும் அகாலிகள் தலைவர் மேலும் கூறியுள் ளார். (உ)

# 'இனத்தின் அடிநாதம் இசை'

## கலைஞர் பத்மநாதன் பாராட்டுவிழாவில் 'அமிர்'

[மாவிட்டபுரம்]

"தமிழ் மக்களது வாழ்வு இசையோடு பின்னிப்பிணைந் தது மற்றைய இனங்களைவிட எமது இனம் இசைத்துறைக்கு முக்கியத்துவம் அளித்து வந் துள்ளது. இந்தப்பாரம்பரிய இசையைத் தொடர்ந்து நாம் பேணிப்பாதுகாக்க வேண்டும். எமது கலைகளுக்கு உரிய இடம் கிடைக்கவும், நமது கலைஞர் களுக்கு உரிய வாய்ப்புகள், வசதிகள் கிடைக்கவும் நாம் என்றும் குரல் எழுப்பி வரு வோம்".

இவ்வாறு ஜனாதிபதி விருது பெற்ற நாகசுரக் கலைஞர் திரு என். கே. பத்மநாதனுக்கு இலங்கை இசைவேளாளர் சங் கத்தினால் எடுக்கப்பட்ட பாராட்டு விழாவில் பேசிய எதிர்க்கட்சி முதல்வரும், காங் கேசன்துறைப் பாராளுமன்றப் பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத் தில் நடந்த இவ்விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக உப வேந் தர் கலாநிதி சு. வித்தியானந் தன் தலைமை வகித்தார். இணு வில் கே. ஆர் சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கள இசையு டன் ஆரம்பமான இவ்விழா வினை திரு. அமிர்தலிங்கம், தொழிலதிபர் திரு க. கனக ராஜா, திரு சு. வித்தியானந்தன் ஆகியோர் மங்கல விளக்கேற் றித் தொடக்கி வைத்தனர். யாழ் அரச அதிபர் தேவநே சன் நேசையா திரு. பத்மநா தனுக்குப் பொன்னாடை போர் த்திக் கௌரவித்தார். பண்டி தர் மா. குமாரசாமி பாராட் டுப்பத்திரம் வாசிக்க தொழி லதிபர் திரு. க. கனகராஜா அதனை திரு. பத்மநாதனிடம் கையளித்தார். திரு. அமிர்த லிங்கம் மேலும் கூறியதாவது–

"ஓர் இனத்தின் அடிநாத மாக விளங்குவது இசையா கும். அடிமை நிலையிலுள்ள இனங்களின் உந்து சக்தியாக இசை விளங்குகிறது. இனம் அழிவுப்பாதையில் செல்கின்ற போதும் தமது கடமையை மறவாது தொடர்ந்து கலைச் சேவையாற்றி இனத்தின் கலைப் பொக்கிஷங்களை அழி யாது பாதுகாக்கும் இசைக்கலை ஞர்களை நாம் போற்றிக் கௌ ரவிக்கவேண்டும்

"ஒரு காலத்தில் தென்னிந் தியாவிலேயே சிறந்த கலைஞர் கள் இருந்தார்கள் ஆனால் இன்று நமது தமிழீழத்திலும் தரமான திறமை வாய்ந்தகலை ஞர்கள் உருவாகியுள்ளது எமக் குப் பெருமைதருகிறது.

கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகை யில்;– பண்டைக் காலத்தில் எமது கலைகளை மன்னர்கள் கட்டிக்காத்து வளர்த்தனர். ஆனால் இப்போது இந்நாட்டு மன்னர்களாக விளங்கும் நாம் இக்கலைகளைப் பேணி வளர்க்க முன்வருகிறோமில்லை. பாரம் பரிய கலைகளைப்பாதுகாக்க எமது இளைஞர்கள் முன்னின் றுழைக்க வேண்டும். ஆங்கிலம் தெரியாதவர்கள்கூட ஆங்கி லேய இசையைக் கேட்பதை நாகரீகமாகக் கொள்வதை இன்று காண்கிறோம். எமக்கே உரித்தான சிறந்த கலைகளை விடுத்து அந்நிய கலைகளைப்பின் பற்ற முனைவது நல்லதல்ல என்றார்.

யாழ். முதல்வர் திரு இராசா விஸ்வநாதன், சங்கீத வித்து வான் ராம். குமாரசாமி, இலங்கை இசை வேளாளர் சங் கத் தலைவர் திரு என். ஆர், சின்னராஜா, நாடக அரங்கக் கல்லூரி சார்பில் திரு. சு. லோகநாதன், இலங்கைத் தமி ழர் ஆசிரியர் சங்கச் சார்பில் திரு. சிவபாலசிங்கம், முல்லைத் தீவு கூ. உ ஆணையாளர் திரு நா கந்தையா, மாவை சேனாதி ராஜா, மறுமலர்ச்சி மன்றத் தலைவர் திரு. பொ. செல்வரத் தினம், திரு. பொன் சுந்தர லிங்கம், திருமதி சத்தியபாமா இராஜலிங்கம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

## முதலைவாயில் சிக்கிய வயோதிபர்

(கிளிநொச்சி)

ஆடுமேய்க்கச் சென்ற 85 வயது வயோதிபரை முத லையொன்று இழுத்துச் சென்று பலி கொண்டது!

இப்பரிதாப சம்பவம் கண்டாவளையில் நிகழ்ந் துள்ளது.

கண்டாவளை கிராமத் தில் வசிக்கும் வினாசித் தம்பி. வீரகத்தி என்னும் வயோதிபர்தமதுபட்டியில் உள்ள ஆடுகளை மேய்பதற் கென கண்டாவளை கனக ராயன் ஆற்றுக்கு அண் மையில் சென்றார். ஆடுகள் தண்ணீர் குடிப்பதற் கென அவற்றை ஆற்றங்க கரைக்குக் கொண்டு சென் றபோது ஆற்றில் உள்ள முதலை திடீரென வயோதி பரின்காலைக் கவ்விதண்ணீ ரிலுள் இழுத்துச்சென்றது. இதனால் வயோதிபர் மர ணத்தை தழுவினர். இம் மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி மேற்கொண்டு விபததமர ணம் என தீர்ப்பு வழங்கி னார்.

## காங்கிரஸில் சேர்ந்தனர்

புதுடில்லி, நவ. 18.

நாகலாந்து சட்டசபையில் தெரிவு பெற்றுள்ள நான்கு சுயேச்சையாளர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துள் ளதாக அறிவித்தள்ளனர்.

நாகலாந்து தேசிய ஜனநாய கக் கட்சித் தலைவர்கள் நாக லாந்து மாநில ஆளுநருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்; தமக்கே ஆட்சி அமைக்க ஏற்று திப் பெரும்பான்மை உண்டு என்றும் தமது கட்சியின் 24 உறுப்பினர்களோடு தெரிவு பெற்ற ஏழு சுயேச்சைக் கட்சி உறுப்பினர்களை யும் சேர்த்து 31 பேர் ஆதர வாக உள்ளனர் என்றும் தெரி வித்துள்ளார்.

ஆனால் மேற்கூறிய நான்கு சுயேச்சை வேட்பாளர்களும் தமது மறுப்பை நாகலாந்து மாநில ஆளுநருக்குத் தெரி வித்து காங்கிரஸில் தாங்கள் சேர்ந்துள்ளதாக அறிவித்துள் ளனர். (உ)

# ஆசிய விளையாட்டுப் போட்டி:

## முத்திரை, நாணயங்கள் வெளியீடு

புதுடில்லி, நவ. 18

புதுடில்லியில் நடைபெறும் 9-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளை முன்னிட்டு இந் திய மத்திய அரசு புதிய நாண யங்களையும், முத்திரைகளை யும் நேற்று வெளியிட்டது.

மத்திய அரசு நேற்று இந் திய மத்திய வங்கியில் வைத்து புதிய 100 ரூபா, பத்து ரூபா நாணய நோட்டுக்களையும் 25 பைசா, 50 பைசா புதிய நாணயங்களையும் வெளியிட் டது.

2 ரூபா, 2 ரூபா 50 பைசா, 50 பைசா, 25 பைசா பெறு மதியான புதிய முத்திரைகளை மத்திய அரசின் தபால் அமைச் சர் வெளியிட்டு வைத்தார். இம்முத்திரைகளில் விளை யாட்டு நிகழ்ச்சிகளே படங்க ளாக அச்சிடப்பட்டுள்ளது. [உ]

# பங்களாதேஷுக்கு இந்தியா ரூ. 60 கோடி கடனுதவி

புதுடில்லி, நவ. 18

"பங்களாதேஷுக்குப் பார தம் 60 கோடி ரூபாவைக் கட னாகக் கொடுக்கிறது. இக்கட னில் 40 கோடி ரூபா மூலதனப் பொருள்களாகவும், 20 கோடி ரூபாவை கடனாகவும் வழங்க வுள்ளது."

இவ்வாறு நேற்று புதுடில்லி யில் பங்களாதேஷ் வெளியு றவு அமைச்சருக்கு அளித்த வரவேற்பில் பாரத வெளியு றவு அமைச்சர் திரு. பி.வி. நர சிம்மராவ் தெரிவித்தார்.

பாரத – பங்களாதேஷ் கூட் டுக் கமிஷன் நேற்று நடத்திய முதல் நிகழ்ச்சி இதுவாகும். அமைச்சர் திரு நரசிம்மராவ் மேலும் தெரிவித்ததாவது:–

"இரு தேசங்களின் வர்த் தகம், தொழில் நுட்பம், விஞ் ஞான ஆய்வு, எரிபொருள் துறை ஆகியனவற்றில் ஒத்து ழைப்பை ஏற்படுத்த இக்கூட் டுககமிஷன் வழிசெய்துள்ளது.

"இருநாடுகளும் மண்டல சார்பற்ற நாடுகளாக இருப்ப தால் அவை அமைதிக்குத் தொடர்ந்து பாடுபடும். பார தம் பங்களாதேஷின் அபிவி ருத்திக்கும், பாதுகாப்புக்கும் உதவும்" என்றார். [உ]

## திருமதி பூட்டோ பிராங்போட் செல்வார்

கராச்சி, நவ. 18

திருமதி நூஸ்ரத் பூட்டோ வைத்திய சிகிச்சை பெற வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து நாளை சனிக்கிழமை பிராங் போட்டுக்கு செல்லவுள்ள இவர் அங்கிருந்தே சிகிச்சைக் காகச் செல்லும் நாடுபற்றித் தீர்மானிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

சென்னை, நவ. 18

தமிழக மாநிலத்தில் உள் ளூராட்சி தேர்தல்களை நடா த்துவதற்கான தேர்தல் தின த்தை முடிவு எடுப்பதற்காக தமிழக அனைத்துக் கட்சிக ளின் மகாநாடு நடாத்தப் படவுள்ளதாக மாநில அரசின் உள்ளூராட்சித்துறை அமைச் சர் திரு. பி குழந்தைவேலு தெரிவித்துள்ளார். (உ)

### மணிவாக்கு

இராமநாமத்தில் தனக்கு இருந்த விசுவாசத்தின் மூலம் அனுமான் கடலைத்தாண்டி மறுகரை சேர்ந்து விட்டார். ஆனால் இராமனே கூட சேது ஒன்றை நிறுவவேண்டியதாயிற்று என்பது பழமொழி.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## ஆசியாவின் அலங்கார வைபவம்

"எல்லா ரோட்டுகளும் ரோமாபுரிக்கு இட்டுச்செல்கின்றன" என்ற பழமொழி பண்டைய ரோமன் ஏகாதிபத்தியத்தின் பெருமையை விளக்குகிறது.

இன்று புதுடில்லியில் ஆரம்பமாகும் ஆசிய விளையாட்டு அலங்காரவிழாவைக் கண்டுகளிக்க பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்திய தலைநகரை நாடுகின்றனர்; ஆசிய முன்னேற்றத்தின் ஒரு முக்கிய மைற்கல்.

பிரதமர் இந்திராவின் 65வது பிறந்ததினம் இன்று என்பதும் சிறப்பு அளிக்கிறது.

1951ல் ஆரம்பமான ஆசிய விளையாட்டுப்போட்டி 31 வருடங்களில் பெரு வளர்ச்சி கண்டிருக்கிறது. இக்கட்டத்தில் அதன் ஒன்பதாவது விழாவை இந்தியத் தலைநகரில் அமைத்திருப்பது பல வகைகளிலும் பொருத்தமானது.

எந்த நாட்டிலிருந்தும், எந்த நாகரிகத்திலிருந்தும் நல்லவற்றை உட்கொண்டு சிரணிக்கும் அபூர்வசக்தி பாரதநாட்டின்சிறப்பியல்பு என்று பண்டிதர் நேரு சொல்வது வழக்கம்.

இன்று சுதந்திர இந்தியாவின் மூன்றாவது பிரதமர் இந்திரா தமது தகப்பனின் இக்கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில், பல எதிர்ப்புகள் மத்தியில் இப்பெரும் பொறுப்பை மனமார ஏற்று செயற்படுத்த முன்வந்ததால் ஆசியாவின் முழுக் கவனத்தையும் இன்றைய புதுடில்லி விழா கவர்ந்திருக்கிறது. வருகிற மார்ச்மாதத்தில் நடைபெறவிருக்கும் அணிசேரா மகாநாடும் இந்தியாவின் புகழை உயர்த்த வல்லது.

அகில உலகும் கண்டுகளிக்க ஆவற்படும் இவ்விழாவில் இலங்கை உட்பட சுமார் 29 நாடுகளிலிருந்து 5000 விளையாட்டு வீரர்கள் பங்கு பற்றுவதாக ஒரு அறிக்கை கூறுகின்றது. யாழ்ப்பாணத்தின பிரபலம் பெற்ற செல்வ சௌரி வரதகுமார் இதில் இடம் பெறுவது பெருமைக்குரியது.

இப்பெருவிழாவின் அமைப்பை விளக்கும் வழிகாட்டி நூல் ஒன்று எங்கள நாட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இப்பெருந்தொகையான வீரர்களும் அவர்களின் அதிகாரிகளும் வசதியாக வசிக்க, இதற்கென ஒரு 'ஆசிய விளையாட்டுக் கிராம அமைப்பு' ஒன்று 60 ஏக்கர் காணியில் கட்டப்பட்டுள்ளது.

16 நாட்களுக்கு நடைபெறும் இவ்வலங்கார விழாவை சுமார் 75 000 பேர் வசதியாக இருந்து பார்வையிட 90 ஏக்கர் காணியில் ஒரு புதுபிரதான அரங்கு கட்டப்பட்டுள்ளது; இதே போன்று நவீன அரங்குகள் உலகின் முன்வரிசையில் மதிப்பிடக்கூடியமுறையில் கட்டப்பட்டுள்ளன.

விளையாட்டுகள் மட்டுமல்ல, கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றை நினைக்குங்கால் இன்று பேரிலும் பிணக்கிலும் அல்லற்படும் உலகுக்கு இவ்வித அற்புத களியாட்டம் ஒரு சர்வரோக நிவாரணியென்றே கொள்ள வேண்டும்.

சகோதரத்துவத்தை வளர்க்கவும் தன்னம்பிக்கைக்கு உரம் போடவும் விளையாட்டைப்போல் வேறெதுவும் நிகரில்லையெனலாம்; சிறப்பாக ஜப்பானிய, சீன, கொரிய, இந்திய சாதனைகள் இதற்கு உதாரணமாகும்.

இந்திய சுதந்திரத்துக்கு ஒரு வகையில் வித்திட்ட கல்கத்தா உதைபந்தாட்டம் எமது நினைவுக்கு வருகின்றது.

இந்திய மக்கள் பலமற்ற பேர்வழியென்றும், தங்களைப் போல உடலுறுதியற்ற பயந்தாங்கொள்ளிகள் என்றும் எள்ளிநகையாடிய ஆங்கிலேயர் தங்கள் பாடப் பிழையென்று அறிந்தது கல்கத்தா நகரின் உதைபந்தாட்ட விளையாட்டுப்போட்டியில் எனஅறிக.

சப்பாத்துடன் விளையாடிய வெள்ளையர்களை, வெறுங்காலுடன் தோற்கடித்த வங்காள வீரர்கள் ஆங்கில மக்கள் அதிர்ச்சியுடன் விழித்துப்பார்க்குமளவிற்கு நிகழ்த்திய அருஞ்சாதனைகள் சுதந்திரப் போராட்டத்திற்கு ஒரு பெரும் பங்களிப்பென்று கொள்ளலாம்.

"உலக உதைபந்தைத் திறமையாக ஆடுங்கள்; அதேசமயம் கீதையைப் படியுங்கள்" இதுவே வங்காளம் உலகுக்களித்த உத்தமர் சுவாமி விவேகானந்தரின் உபதேசம்.

வெற்றிதோல்வியால் வரும் மன விகாரங்களை ஒழித்து பற்றற்ற முறையில் விளையாட்டுக்கள் முன்னேறுவதால் தனிமனித ஆத்மிக உயர்ச்சி மட்டுமல்ல, உலக ஐக்கியம் உருவாகுமென்பது இன்றைய இருள் படர்ந்த உலகிலும் கைவிடமுடியாத நம்பிக்கையாகும்.

இவ்வாறு பெருமை பேசுவது ஒரு பக்கம் சார்புள்ள குறிப்பெனக் கருதப்படலாம்; அகில உலகின் ஒலிம்பிக் விளையாட்டு கடந்த விளையாட்டு விழாவில் இரண்டு துண்டானது வாசகர் நினைவில் வரும்; ஆசியவில் குழப்பங்கள். அரிசி தொடக்கம் கிரிக்கெட் வரைக்கும் எல்லாத் துறைகளிலும் ஊடுருவுகின்றன;

இன்றைய விழாவிலும் கம்பூச்சியாவும், இஸ்ரேலும் அழைக்கப்படாதது இந்தக் குறையைச் சுட்டிக்காட்டுகின்றது.

குறைகள் இல்லாது நிறைவு இல்லை; பல நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டிருந்த ஆசிய நாடுகள், பண்டைய வரலாற்றில் மிக உன்னதமான நாகரிகங்கள் கண்டவை நாற்பெருஞ்சமயங்கள் உதயமான ஆசியா நவீன உலகில் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கு இத்துறையிலும் பின்னிற்பதல்லவென்பதற்கு இன்றையவைபவம் இன்றியமையாதது.

# உலகவங்கி உதவியுடன்
# ரூ. 40 கோடி செலவில்
# மன்னார் அபிவிருத்தி வேலைகள்

[மன்னார்]

உலக வங்கியின் நிதிஉதவியுடன் மன்னார் மாவட்டத்தில் 40 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள உலக வங்கி நிபுணர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் உலக வங்கியின் நிதி உதவி மூலம் அபிவிருத்திகள் மேற்கொள்வது தொடர்பாக மன்னார் கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு டி. வாமதேவன் தலைமையில் கருத்தரங்கொன்று நடைபெற்றது. கருத்தரங்கில் உலக வங்கியைச் சேர்ந்த நான்கு நிபுணர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கின் போது மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய தகவல்களை மன்னார் அரசாங்க அதிபர் உலகவங்கி நிபுணர்களுக்கு தெரிவித்தார்.

இக்கருத்தரங்கின் பின் உலகவங்கி நிபுணர்கள் மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்ட வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ள இடங்களை நேரில் சென்று பார்வையிட்டனர். உலகவங்கியின் நிதிஉதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்ட வேலைகள் அடுத்த ஆண்டு ஆரம்பமாகும்.

இவ்வபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக் குளம், கூராங்குளம் போன்ற பல குளங்கள் திருத்தியமைக்கப்படுவதுடன், கடல்த்தொழில் விருத்தி, கைத்தொழில் விருத்திக்கான அபிவிருத்தி வேலைகளும் மேற்கொள்ளப்படும்.

இத்துடன் வீதிகள் புனரமைத்து போக்கு வரத்து வசதிகள் விஸ்தரிக்கப்படுவதுடன் கல்வி வளர்ச்சிக்காகவும் பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

## உதவிப்பணம் பெறுபவர்கள் விண்ணப்பம் மறுபரிசீலனை

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உதவிப்பணம் பெறுபவர்கள் தொடர்பான விண்ணப்பங்கள் மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

அடுத்த ஆண்டு உதவித் திட்டத்தில் உதவிப்பணம் பெறுவதற்கு தகுதியுடையவர்களைத் தெரிவு செய்யும் வகையில் இவ்விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

உதவிப்பணம் பெற்று வருபவர்களது மறுபரிசீலனை விண்ணப்பங்களும், உதவிப்பணம் பெறுவதற்கு புதிதாக விண்ணப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் இப்பரிசீலனையில் இடம்பெற்றுள்ளன.

இம்மாத முடிவுக்குள் இது தொடர்பானவேலைகளை முடித்து இறுதிப்பரிசீலனைக்குசமர்ப்பிக்குமாறு தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. நாகராசா இப்பிரிவு கிராமசேவையாளர்களைப் பணித்துள்ளார்.

(வண். நிரு)

## “வீடற்றவன்” நாவல் விமர்சனம்

கடந்த 13ம் திகதி இணுவில் அ. மி. த. க. பாடசாலை மண்டபத்தில் கலை, இலக்கிய, இளைஞர் வட்டத்தினால், திரு. துரை எங்கரசு தலைமையில் மலையக எழுத்தாளர் திரு. சி. வி வேலுப்பிள்ளையின் "வீடற்றவன்" என்ற நாவல் விமர்சனம் செய்யப்பட்டது.

தலைவர் தமது உரையில் மலையக மக்களின் வாழ்க்கைப் பிரச்னையை, அவர்களின் அன்றாட தேவைகளின் அவசர அவசியத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இந் நாவலை யாழ்ப்பாணத்துசமூக கட்டமைப்புக்குள் வாழ்கின்ற மக்கள்முன் கொண்டு வந்து விமர்சிப்பதன்மூலம் அவர்களின் தேவையை அறிய நன்கு வாய்ப்பேற்படுகின்றது என்றும், இதே போன்று பல் வேறு பிரதேச மக்களது நாவல்களையும் தங்கள் வட்டம் விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்ள இருக்கின்றது என்றும் குறிப்பிட்டார். பதினைந்து வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட இந்நாவல் அன்று சுட்டிக்காட்டிய பிரச்னைகள் இன்றும் அங்கு நிலவுவதாகவும், அதற்கு தீனி போடச் சரியான அணுகுமுறை கையாளப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

தலைமை உரையைத் தொடர்ந்து திரு ந. சபேசன், திரு. கந் தருமலிங்கம் ஆகியோர் விமர்சனம் செய்தனர். கந். தருமலிங்கம் தமது உரையில் பிரச்னைகள் மட்டும் சொல்ல முற்பட்டதாலோ என்னவோ இலக்கிய பண்பிலின்றும் சிறிது ஆசிரியர் தழுவிவிட்டார் என்றும், பிரச்னைகளின் வடிவங்களை ஆவலோடு பார்க்கின்றபோது இலக்கியக் கட்டமைப்பு, கருத்தில் கொள்ள வேண்டிய நிலைமை உருவாகவில்லைஎன்றும், குறிப்பிட்டார். திரு ந. சபேசன் அவர்கள் தமது உரையில் சிறிய உருவத்தில் அமைந்த நூலினுள் பெரிய விடயத்தைச் சொல்லிவிட்டார் என்றும், பழுத்த அனுபவத்தால் மலையகத்தார் பிரச்னையைத் துல்லியமாக படம் பிடித்துள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

## நெடுந்தீவில் பனம்பொருள் கண்காட்சி

(நெடுந்தீவு)

"கடந்த காலங்களிலும் பார்க்கப் பனைகளின் பிரயோசனத்தை நாம் பெறக்கூடிய வாய்ப்புக்கள் இப்போது கிடைத்துள்ளன. நெடுந்தீவில் உள்ள மகளிர் குழுக்கள் இத் துறையில் ஈடுபாடு கொண்டு தமது வருவாயைப் பெருக்க முன்வந்திருப்பது இத்தீவின் எதிர்காலப் பொருளாதார விருத்திக்கு முன்னோடியாக விளங்கும்" என்று நெடுந்தீவு மகளிர் குழுக்கள் ஒன்றிணைந்து நடாத்திய கைப்பணிக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய பல நோக்கு கூட்டுறவுச் சங்க உபதலைவர் திருமதி சி, லீலிமலர் கூறினார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் நெடுந்தீவு கிழக்குக் கிராமோதய சபைத் தலைவருமான திரு. என். இராமச்சந்திரன் தமது உரையில் மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு சிறப்பானஒரு கைப்பணிப்பொருட்காட்சியைநடாத்தக்கூடிய திறமையை மகளிர் குழுக்கள் பெற்றுள்ளது. நெடுந்தீவு யுவதிகளின் மதிநுட்பத்தையும் அவர்களின் துரிதமாகக் கிரகிக்கும் சக்தியையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளதென்றும் போதிய பயிற்சி கிடைக்கும் பட்சத்தில் வடமாகாணத்தில் பனம்பொருட்கள் உற்பத்தித் தொழிலில் நெடுந்தீவு முன்னணி வகிக்கும் நிலை உருவாகும் என்டதற்கு இன்றைய கண்காட்சி ஒரு முக்கிய சான்றாகும் என்றும் சொன்னார்.

காட்சியில் பார்வையாளர்களின் மனதைக் கவரக்கூடிய வகையில் பனம்பொருட்கள் இடம்பெற்றிருந்தன. கூட்டுறவுப் பரிசோதகர் திரு எஸ். சந்திரசேகரம், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் காரியாலயப் பிரதம லிகிதர் திரு. எஸ். தியாகராசா ஆகியோர் மங்களதீபம் ஏற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தனர். நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு இரா. தர்மலிங்கம், திருமதி க. முத்துப்பிள்ளை, செல்வி அடெய்சி, க. சனகம்மா திரு. க. அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் பேசினர். பெருந்தொகையான மக்கள் காட்சியைப் பார்வையிட்டதுடன் பொருட்களையும் வாங்கினர். கண்காட்சி இரு தினங்கள் நடைபெற்றது. (அ)

## மக்கள் கருத்து

### அளவுக்கு மிஞ்சினால்....

எங்கள் குடவோலைகளை வாக்குகளைக் குடத்துக்குளிடாது வெளிச்சத்தில் [விளக்கில்] போட்டுவிட்டால், ஆறு வருடங்கள் மட்டும் அரசோச்சுவதர்காக நாம் 77-ம் ஆண்டில் தெரிவு செய்த தேசிய அரச கூட்ட அங்கத்தவர்கள் 1989வரை பதவியில் ஒட்டிக் கொள்வர். அவர்களின் செயல்கள், அவர்கள் எங்களுக்கு 77-இல் அளித்த வாக்கில் இருந்து வேறுபட்டால் 8-ம் ஆண்டு வரை பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்திருந்து 83-இல் இவர்களை அரியாசனத்திலிருந்து வீழ்த்தி விடலாம்எனக் கட்டிய மனக் கோட்டை தவிடுபொடியாகிவிடும்.

பழகப் பழகப் பாலே புளித்து விடுகிறது. புளி நாள் பட்டாலோ அதில் விஷமே ஏறிவிடும்.

இ. தர்மலிங்கம்
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தமிழ்ச் சங்கப் பரிசு பெறும் பாரதி நூற்றாண்டு நூல்கள்

(நெடுந்தீவு)

பாட்டுடைத் தலைவனாகப் பாரதியை வைத்து ஆக்கப்படும் சிறு பிரபந்தங்களுக்குப் பாரதி நூற்றாண்டையொட்டிப் பரிசில்களை வழங்க இருப்பதாக கொழும்பு தமிழ்ச் சங்கம் இவ்வாண்டு தொடக்கத்தில் அறிவித்திருந்தது. இதனை முன்னிட்டு மேற்படி சங்கத்திற்குக் கிடைத்த பாரதி சிறு பிரபந்தங்களுள்

[5-ம் பக்கம் பார்க்க]

# ஆசியநாடுகளைக் கௌரவிக்கும் 'ஆசியாட்' பந்தயங்கள்




'ஆசியாட்' விளையாட்டுச் சின்னம்

அபிவிருத்தியடைந்து வரும் மூன்றும் உலக நாடுகளாக இருக்கும் ஆசிய நாடுகள் பலவற்றிற்கு இன்றைய தினம் முக்கியம் வாய்ந்த தொன்றாக விளங்குகின்றது.

ஐரோப்பிய, அமெரிக்க மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதார, சமூக அமைப்புகளின் விந்தைகளை தினமும் அறிந்து ஏக்கமுறும் ஆசிய நாடுகள், ஒலிம்பிக், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் அந்நாடுகள் புரியும் விளையாட்டுத்துறை சார்ந்த சாகஸங்களைக்கண்டும் பிரமிப்படைவதுண்டு.

இப்பந்தயங்களில் ஆசிய நாடுகள் பங்கெடுக்கின்ற போதிலும் வெற்றிகளை ஈட்டிப் பெருமை கொள்ளும் சந்தர்ப்பங்களை மிக அரிதாகவே பெற்றுக்கொள்கின்றன! காரணம், வளர்ச்சிடைந்த நாடுகள் விஞ்ஞான, பொருளாதார துறைகளில் மட்டும தாம் பெற்ற முன்னேற்றங்களுடன் நின்றுவிடாது, அவற்றின் துணைகொண்டு தமது பிரஜைகளை மிகவும் வலுவுள்ளவர்களாக்கி உன்னத பயிற்சிகளுடன் இத்தகைய சர்வதேச பந்தயங்களில் ஈடுபடுத்துவதே!

## நோக்கம்

இந்த நிலையினால், ஆசிய நாடுகள் ஏதோ சர்வதேசரீதியில் பந்தயமொன்றில் கலந்துகொள்கின்றோமே என்ற ஒரு கௌரவத்துடன் மட்டும் பங்கெடுக்கின்றன. ஆனால் அவற்றுக்கு அப்போட்டிகளில் குறிப்பிடத்தக்களவு வெற்றிகளை ஈட்டும் சந்தர்ப்பங்கள் மிக அரிதானவையே!

ஆகையினால் ஆசிய நாடுகள் தமது வளர்ச்சிக்கும், பிரஜைகளின் திறமைக்கும் ஏற்ற விதத்தில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையிலேயே 'ஆசியாட்' (Asiad) என்றழைக்கப்படும் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

## ஆசிய விளையாட்டுக்களின் தந்தை

ஆசியவிளையாட்டுப்போட்டிகளின் தந்தையென 1947-ல் இந்தியாவின் ஒலிம்பிக் சம்மேளனத் தலைவராகவிருந்த பேராசிரியர் சோண்டி அழைக்கப்படுகின்றார். இவரே ஆசிய நாடுகளும் முற்றுமுழுதாகப் பங்கெடுத்து வெற்றிகளை அவை எளிதாகப் பெற்றுக் கொண்டு, தமது விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பித்தார். பேராசிரியர் சோண்டி தமது ஆசிய விளையாட்டுக்கள் பற்றிய யோசனையை அப்போதைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவிடம் தெரிவித்தபோது அவரும் பெரும் மகிழ்ச்சியடைந்து தமது பூரண ஒத்துழைப்பினை இவருக்கு வழங்கினார்.

## முதலாவது 'ஆசியாட்'

முதலாவது ஆசியவிளையாட்டுப் போட்டிகள் 1951-ம் ஆண்டு புதுடில்லியிலேயே ஆரம்பமாகின. அப்போது இப்போட்டிகளில் 11 நாடுகளைச் சேர்ந்த வீரர்களும், வீராங்கனைகளுமாக 600 பேர் மட்டுமே பங்கு பற்றினர். இதனைத் தொடர்ந்து 1951-ல் பிலிப்பைன்ஸில் இரண்டாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளும், 58-ம் ஆண்டு ஜப்பானில் மூன்றாவது 'ஆசியாட்' போட்டிகளும்நடைபெற்றன. பின்னர் நான்குஆண்டுகளுக்கு ஒரு தடவை என்ற ரீதியில் இந்தோனேஷியா, தென் கொரியா, ஈரான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இப் போட்டிகள் இடம்பெற்று வந்தன.

## முன்னேற்றம்

இறுதியாக தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இடம் பெற்ற எட்டாவது 'ஆசியாட்' பந்தயங்களில் 25 நாடுகளைச் சேர்ந்த 3000 விளையாட்டு வீரர்கள் 19 விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றினர். ஆரம்பகால 'ஆசியாட்' போட்டிகளின் எண்ணிக்கை

இத்துடன் உள் அரங்கு (Indoor Games) விளையாட்டுக்களை நடத்தவென பிரமாண்டமான நவீன அரங்கொன்றும் புதுடில்லியின் 'இந்ரபிரஸ்தா' என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ளது. இங்கு சுமார் 25,000 பார்வையாளர்கள் அமரக் கூடிய வசதிகளுண்டு. இந்த வகையிலான அரங்குகளில் உலகில் நான்காவது இடத்தை இது வகிக்கிறதெனத் தெரிவிக்கப்பட்டது.

16 தினங்களுக்கு நடைபெறவுள்ள 'ஆசியாட்' போட்டிகளுக்கென வேறு குறிப்பிட்ட பிரமாண்டமான அரங்குகள் உட்பட 17 அரங்குகள் பயன்படுத்தப்படவிருக்கின்றன. இவற்றில் சில புதிதாக நிர்மாணிக்கப்பட்டவை; ஏனையவை புதிப்பிக்கப்பட்டவை.

## ஆசியவிளையாட்டுகிராமம்

ஸ்ரீபோர்ட் என்ற இடத்தில் ஆசிய விளையாட்டுக் கிராம



யுடனும், வீரர்களின் எண்ணிக்கையுடனும் இந்த எண்ணிக்கைகளை ஒப்பிடும்போது 'ஆசியாட்' விளையாட்டுக்களின் முக்கிய நோக்கம் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்துள்ளதென்பதனை அறியமுடிகின்றது.

மொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக் கிராமத்திலேயே விளையாட்டு வீரர்கள், ஏற்பாட்டாளர்கள் பத்திரிகையாளர்கள் தங்குவார்கள். இதன் நிர்மாணவேலைகள் மிக அண்மையிலேயே முடிவடைந்தன. சகல தங்குமிட வசதிகளையும் கொண்ட இந்த ஆசிய கிராம விடுதிகளை எதிர்காலத்தில் குடியிருப்புக்களாக மற்றும் யோசனையை இந்திய அரசாங்கம் கொண்டுள்ளதென்றும்தெரிவிக்கப்பட்டது.

## ஒன்பதாவது ஆசிய விளையாட்டு போட்டிகள்

இன்று புதுடில்லியில் ஆரம்பமாகும் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 33 நாடுகளைச் சேர்ந்த 5000 விளையாட்டு வீரர்கள் பங்கு பற்றுகின்றனர். சுமார் 22 போட்டிகள்நடத்தப்படவிருக்கின்றன.

## யானைக்குட்டி சின்னம்

இவ் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் சின்னமாக யானைக் குட்டி

**— பா. அனந்தகிருஷ்ணன் —**

விளங்குகின்றது. இதற்கு 'அப்பு' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. யானைக் குட்டி ஒன்றினை சின்னமாக மட்டும் வைத்துக்கொள்வதில் நின்றுவிடாது, ஆரம்பநிறைவு நாள் வைபவங்களில் பார்வையாளர்களையும் விருந்தினர்களையும் மகிழ்விக்கும் வகையில் நிஜமான யானைக்குட்டியொன்றினையும் பயன்படுத்த விளையாட்டு ஏற்பாட்டாளர்கள் ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

இப்போட்டிகளை நடத்தவென இந்திய அரசாங்கம் 2000 கோடி ரூபாக்களைஒதுக்கியுள்ளது. இத்தொகையில் சுமார் 170 கோடியை சில நாடுகள் வழங்கியுள்ளதுடன், போட்டிகளுக்கானஉபகரணங்கள் சிலவற்றையும் அவை அன்பளிப்புச் செய்துள்ளன.

## ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கு

புதுடில்லியில் ஆசியாட் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகவிருக்கும் விளையாட்டரங்கிற்கு 'ஜவஹர்லால் நேரு' விளையாட்டரங்கென பெயரிடப்பட்டுள்ளது. இந்த அரங்கு சர்வதேச விளையாட்டரங்குகளின் தரத்துக்கு சமமான நவீன வசதிகளைக் கொண்டிருக்கின்றது. சுமார் 75,000 பார்வையாளர்கள் 'ஆசியாட்' போட்டிகளின் ஆரம்ப நிறைவு நாள் நிகழ்ச்சிகளை இந்த அரங்கிலிருந்து பார்வையிடக்கூடியதாகவிருக்குமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 90 ஏக்கர் நிலப் பரப்பின் இதன் நிர்மாணம் உள்ளடக்கியுள்ளது.

## இலங்கையின் பங்கு

ஆசியவிளையாட்டுப்போட்டிகளின் ஆரம்பகாலம்தொட்டு இலங்கையும் இப் போட்டிகளில் பங்கெடுத்துவந்துள்ளது 'ஆசியாட்' போட்டிகளில் தங்கப்பதக்கமொன்றை சுவீகரித்த முதலாவது இலங்கையர் என்றபெருமையை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் என்பவரே பெறுகின்றார்.

இவர் ஜப்பானில்நடைபெற்ற மூன்றாவது ஆசியாட் போட்டிகளில் ஆறடிக்கு மேற்பட்ட உயரத்தைத் தாண்டி தமது வெற்றியைப் பெற்றுக்கொண்டார். இது ஒரு சாதாரண வெற்றியாகமட்டும் அமைந்துவிடவில்லை. அப்போது உயரம் பாய்தலில் ஒரு சாதனையாகவும் விளங்கியது

திரு. எதிர்வீரசிங்கம் 62-ம் ஆண்டு இந்தோனேஷியாவில் நடைபெற்ற 'ஆசியாட்' போட்டிகளில் கலந்துகொண்டு திறமையாகப் பேட்டியிட்டார் ஆயினும் அவரால் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை மட்டுமே சுவீகரிக்க முடிந்தது

இலங்கைக்கும் தமிழினத்துக்கும் பெருமை தேடித் தந்த இவ்வீரர் இன்று எம் மத்தியில் இல்லை ஆனால் இவரது ஆற்றல்களை இன்றும் பலர் பேசிக்கொள்வதை கேட்க முடிகின்றது

## இரு பதக்கங்கள்

திரு. எதிர்வீரசிங்கம் பெற்ற தங்கப்பதக்கத்தைத் தொடர்ந்து, எட்டு வருடங்களுக்குப் பின்னர் இலங்கை மீண்டும் தென் கொரியா நாட்டில் 1970ல் நடைபெற்ற ஆசியாட்போட்டிகளில் இருதங்கப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டது. லூசியன் ரோசா என்ற வீரர் மட்டுமே இவ்விரு பதக்கங்களையும் 5000, 10,000 மீட்டர்கள் ஓட்டப் போட்டிகளில் பெற்றுக் கொண்டார்.

இவற்றைவிட இலங்கை வீரர்கள் இரண்டாம், மூன்றும் இடங்களை சில போட்டிகளில் பெற்றுக் கொண்டபோதிலும் குறிப்பிடத்தக்க அளவு வெற்றிகளைப் பெறவில்லை.

## தமிழ்ப்பெண்

இம்முறை இலங்கையின் சார்பில் 52 போட்டியாளர்கள் 'ஆசியாட்' போட்டிகளில்

**தங்கப் பதக்கம் பெற்ற முதலாவது இலங்கையர் எதிர் வீரசிங்கத்தை மறக்கமுடியாது**

கலந்துகொள்ளவிருக்கின்றனர் ஏறத்தாள சகல ஆசியாட்போட்டிகளிலும் இவர்கள் ஈடுபடவுள்ளனர்.

இப்போட்டியாளர்களில் ஒரேயொரு தமிழ்ப்பெண்மணியான திருமதி செல்வகௌரி வரதகுமார் 100 மீட்டர் தடை தாண்டி ஓட்டப் போட்டியில் கலந்து கொள்கிறார். இலங்கையில் இவர் ஒரு சாதனையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எடுத்துக்காட்டும்

சுமார் ஐயாயிரம் ஆசிய வீரர்கள் இந்த ஒன்பதாவது 'ஆசியாட்' விளையாட்டுப் போட்டிகளில் தமது தரங்களுக்கமைய பங்கெடுக்கும் மனநிறைவோடு இன்று கம்பீரமாக 'ஜவஹர் லால் நேரு அரங்கில்' அணிவகுக்கவுள்ளனர். இவ் அணிவகுப்புகள் இவர்களும், இவர்களின் தாயகங்களும், 'எப்போதும் முன்னணியில்' [Ever Onward] என்ற 'ஆசியாட்டின்' வாசகத்துக்கமைய விளையாட்டுத் துறையில் பெற்ற தூய வயர்ச்சியினை வல்லரசுகள் என்று அலட்டிக் கொள்பவற்றுக்கு நிச்சயம் எடுத்துக்காட்டுவதாக அமையும்.

---

# கல்லூரி உதைபந்தாட்டம்

(அரியாலை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும், யாழ் பரியோவான் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற வருடாந்த உதைபந்தாட்டப் போட்டியில் 1ம் பிரிவுக்கான போட்டியில் 3: 0 என்ற கோல்களாலும், 2ம் பிரிவுக்கானபோட்டியில் 3: 0என்ற கோல் களாலும் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டிகள் வெற்றி பெற்றது.

மூன்றும் பிரிவுக்கான போட்டியில் 1: 0 என்ற கோலால் ஹாட்லிக் கல்லூரி வெற்றி பெற்றது. (அ)

---

## தமிழ்ச்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நெடுந்தீவுக் கவிஞர் பண்டிதர் க. த. ஞானப்பிரகாசத்தின் 'பாரதி பிள்ளைத் தமிழ்' என்னும் நூலுக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. இரண்டாவது பரிசு 'பாரதி பிள்ளைத் தமிழ்' என்னும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வித்துவான் சி. ஆறுமுகத்தின் நூலுக்குக் கிடைத்துள்ளது க வாஞ்சிக்குடியைச் சேர்ந்த கவிஞர் வி. சிவலிங்கத்தின் 'பாரதி அந்தாதி', தெல்லிப்பளை வ. குகசர்மாவின் 'பாரதி கலம்பகம்' ஆகிய நூல்களுக்கு மூன்றும் பரிசில்கள் கிடைத்துள்ளன.

இந்நூல்களின் அரங்கேற்றமும் பரிசில்கள் வழங்குதலும் பொதுப்பரிசில்கள் வழங்குதலும் பொதுப் பரிசில்கள் வழங்குவதற்கான தமிழ்ச் சங்கச் சிறப்பு நிகழ்ச்சியின் போது இடம் பெறும். (அ)

---

# தெரிவு

(அரியாலை)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியையான திருமதி சாலோசதேவி வரதன் கல்விப் பட்டப் பின் படிப்புப் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இப் பயிற்சியை மேற்கொள்வார். (அ)

---

# இருவார விளக்க மறியல்

(கிளிநொச்சி நிருபர்)

கூட்டுறவு சங்கமொன்றில் பெறுமதி வாய்ந்த பொருட்களை திருடிய சந்தேக நபர்கள் இரு வாரம் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பரந்தன் குமரபுரத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் பல பெறுமதி வாய்ந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிசில் செய்யப்பட்ட புகாரை யடுத்து சார்ஜன்ட் திரு. பீ. சுப்பிரமணியம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் கிளிநொச்சியை சேர்ந்த எஸ். சிவசுப்பிரமணியம், கே. கந்தசாமி, எஸ். ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரை கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி ஜெகசோதி முன்னிலையில் ஆஜர் செய்தபோது இம் மூவருக்கும் இருவார கால விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது.

# 'தமிழ் இனத்தின் சுதந்திரமே தமிழ்க்காங்கிரஸ் லட்சியம்'

## மகளிர் பேரவைக்கு, தமிழ் இளைஞர் காங்கிரஸ் செயலாளர் பதில்

[யாழ்ப்பாணம்]

''தமிழ் காங்கிரஸின் பொதுச்செயலாளராக திரு. எம். சிவசிதம்பரம் இருந்த பொழுது தமிழ்க்காங்கிரஸின் கொள்கை, ஐக்கிய இலங்கையாகவும் ஒற்றை ஆட்சியை ஆதரிப்பதாகவும் இருந்தது திரு. சிவசிதம்பரம் கட்சியை விட்டு விலக்கப்பட்டபின்னர், தமிழ்க்காங்கிரஸ் அங்கத்தவர்கள் ஒரு மகாசபையாகக்கூடி, கட்சியின் யாப்பினை உருவாக்கினார்கள் அந்தயாப்பில்ஒற்றையாட்சி கொள்கையோ, ஐக்கிய இலங்கை கொள்கையோ இடம்பெறவில்லை. தமிழ் தேசிய இனத்தின் சுதந்திரமே அறுதியான, உறுதியான, இறுதியான லட்சியமாக ஏற்று தமிழ்க்காங்கிரஸ் இன்று இயங்கிவருகிறது''

தமிழ் இளைஞர் காங்கிரஸ் செயலாளர் திரு. இ. ஏ. ஆனந்தராசா, கூட்டணி மகளிர் பேரவை உரும்பராய்க் கிளையின் தீர்மானம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''கூட்டணியினர் தமது எதிரணியினர் மீது வழக்கமாகச் சுமத்தும் அர்த்தமற்ற குற்றச்சாட்டான ஒற்றுமையைச் சிதறடிக்க முயற்சிக்கின்றார்கள் என்பதையே கூட்டணி மகளிர்பேரவை கிளை கூறுகின்றது நம்பிக்கைவைக்க முடியாத தலைவர்களையோ, கட்சியையோ ஒற்றுமை என்ற ஒரு காரணத்திற்காக எவரும் ஆதரிக்கமுடியாது. தமிழ்க்காங்கிரசாக இருந்தாலும்சரி, விடுதலைஅணியாக இருந்தாலும் சரி, அல்லது சுயாட்சிக்கழகமாகவோ அல்லது வேறு எந்தத் தமிழ் அணியானாலும் சரி அவை தமது இயக்கத்தின் மூலம், தமது கொடியின் கீழ் மக்களை ஒன்று படுத்தவே முயல்கின்றன. தாங்கள் என்ன தவறு செய்தாலும் தங்களைத் தட்டிக் கேட்க வேறோர் அணி இருக்கக்கூடாது தாங்கள் எதிர்ப்பின்றிப் பாராளுமன்றப் பதவிகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு தான் கூட்டணியினர் ஒற்றுமைபற்றிப் பேசி வருகின்றனர்!

35 லட்சம் தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமையைப் பற்றிப் பேசியவரும், வட்டுக்கோட்டை கூட்டணிமகாநாட்டில் தலைவர்களுள் ஒருவராக ஏற்றுக்கொள்ளப்பட்டவருமான திரு தொண்டமான் இன்று ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கின்றார். கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மீது ஒழுங்குநடவடிக்கை எடுத்தால் அரசாங்கதரப்புக்கு அவர்கள் மாறிவிடக்கூடும் என்று கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அமிர்தலிங்கம் அஞ்சுகின்ற அளவுக்கு இலட்சியப்பற்று இல்லாதவர்களே ஒற்றுமையின்பேரால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசியல் அனுபவம் வாய்ந்தவரும் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவராக இருந்தவருமான திரு இராசதுரை இன்றைய அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கின்றார். பொத்துவில் திரு. கனகரெத்தினம் லட்சியம் மறந்து மாவட்ட அமைச்சரானார். இவர்களையெல்லாம் ஒற்றுமையின்பேரால் ஆதரித்து ஏமாந்த தமிழினத்தை இனி எவரும் ஒற்றுமையின்பேரால் ஏமாற்ற முடியாது.

தமிழினத்தின் நலனுக்காக உழைக்கும் இயக்கங்கள் எத்தனையானாலும் அத்தனையும் தமிழ்ஈழ இலட்சியத்தினைப் பொறுத்தவரை ஒரே கருத்தினையே கொண்டிருப்பதையிட்டு மகிழ்ச்சிகொள்ளவேண்டியநேரத்தில் கூட்டணிமகளிர் பேரவை கவலைப்படுவது வேதனைக்குரியதொன்றாகும்.

1977ல் கூட்டணியை ஆதரித்த மக்கள் ஆணை வெறுத் தொகுதிப் பிரிவொர்கள் என்ருல் அதற்கான பொறுப்பு கூட்டணியையே சார்ந்ததாகும், தமிழ்ஈழத் தேசிய மன்றம் அமைத்துத் தமிழ் ஈழத்தை உருவாக்குவோம் என்ற சத்தியத்தைக் கூட்டணித் தலைவர்கள் இன்று வரைக்கும் நிறைவேற்றாததினாலேயேஅவர்கள்மக்கள்மத்தியில் செல்வாக்கு இழந்துவருகின்றனர்.

கூட்டணி எவ்வாறு நடக்க வேண்டும் என்று திரு. குமார் பொன்னம்பலம் வழிகாட்டவோ அறிவுரை கூறவோ இல்லை. தமிழ் தேசிய இனத்தின் சார்பில் அங்கம்வகிக்கும் உறுப்பினர்கள் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில் இன்றைய பாராளுமன்ற ஆயுளை நீடிக்கச் செய்ய நடைபெறும் நடவடிக்கைகளை ஆதரிக்கக்கூடாது அவர்கள் வெறும் அறிக்கைகளோடு நின்றுவிடாமல் சாத்தியமான எதிர்ப்பினைக்காட்ட இதய சுத்தியோடு முன்வரவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் வேண்டுகோள் ஒன்றினை திரு. குமார் பொன்னம்பலம் விடுத்துள்ளார். தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் தமது பிரதிநிதிகளுக்கு வேண்டுகோள் விடுக்கும் உரிமையுண்டு.

தமிழ்காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களை வைத்துக்கொண்டு கூட்டணியில் தமிழ்காங்கிரஸ் அங்கம் வகிக்கின்றது என்று உண்மைக்கு மாறான பிரசாரத்தினை கூட்டணி மகளிர் பேரவை செய்யவருகின்றது இவ்வாறு பிரசாரம் செய்தால்தான்கூட்டணியைக் காப்பாற்றமுடியும் என்று அவர்கள் கருதுகின்றார்கள் போலும். (உ)

## யாழ்.நகரில் அக்டோபர் புரட்சிதினம்

(யாழ்ப்பாணம்)

'அக்டோபர் புரட்சி தினம், நாளை சனிக்கிழமை யாழ். ட்ரிம்மர் மண்டபத்தில் கொண்டாடப்பட விருக்கின்றது.

இதனையொட்டி கவியரங்கு புத்தகங்களை வெளியீடு ஆகியன இடம்பெறும். திரு. க. கிருஷ்ணபிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ள இக்கொண்டாட்டத்தில் திருவாளர்கள் ஏ.ஸ் இராசையா, என் முத்தையா, சி. கணேசன், எம். இக்பால், ஏ. பரத்குணம் ஆகியோர் நினைவுரைகள் ஆற்றுவார்கள்.

கவிஞர் சில்லையூர். செல்வராசன் தலைமையிலான கவியரங்கில் கவிஞர்கள் தேவி பரமலிங்கம், பொன். பொன்ராசா பாசையூர். தேவதாசன் தில்லை முகிலன், வீ.ரி. இளங்கோவன் ஆகியோர் பங்கு பற்றுவார்கள்.

'மக்கள் இலக்கியம்' என்ற பத்திரிகையும் இக் கொண்டாட்டத்தில்வெளியிடப்படும். திரு. கி. பவானந்தன் தலைமையில் நடைபெறும் இவ் வெளியீட்டுரையும். திரு. வி.சின்னத்தம்பி வெளியீட்டுரையும், திரு முத்துசிவஞானம், எஸ் குணேந்திரராசா ஆகியோர் அறிமுகவுரையும் நிகழ்த்துவார்கள்.

எழுத்தாளர் திரு. கே டானியால் 'இலக்கியத்தில் சாதி' என்ற பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (கி)

## பெற்றோர் கவலையீனம்: சிறுவன் மரணம்!

(கிளிநொச்சி)

பெற்றோரின் கவலையீனத்தால் பதினொரு வயது சிறுவனொருவன் மரணமடைந்தான்.

கனகாம்பிகை குளத்தை சேர்ந்த இராமலிங்கம் நெடுஞ்செழியன் என்னும் சிறுவன் திடீரென மரணமானது தொடர்பான விசாரணையை கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்து மரண விசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவை சேர்ந்த ஜனாப். ஆர். ரி. பரீத் ஆஜர் செய்தார்.

மரணமான சிறுவனின் தந்தை ரி இராமலிங்கம் சாட்சியமளிக்கையில் :– 'தீபாவளித் தினத்தன்று மகன் எண்ணை வைத்து முழுக்காடி அன்றைய தினம் ஆட்டிறைச்சி கறியுடன் உணவு உட்கொண்டார். இரவு தனக்கு சுகமில்லை என்று கூறினார். கடையில் பனடோல் மாத்திரை வேண்டி கொடுத்தோம். மறு நாள் காலை தனக்கு வருத்தம் சுகமெனக் கூறி பாடசாலை சென்றார். மத்தியானம் பாடசாலையால் வந்ததும் மீண்டும் சுகமில்லை என கூறினார். பனடோல் மாத்திரையே கொடுத்தோம். சிறிது நேரத்தில் உடல் வலிப்பதாக கூறினார். பின்னர் மரணமானார்' என்று கூறினார்.

தாய் இ கனகாம்பிகையும் சாட்சியமளித்தார். நோய்க்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்படவில்லை எனவும் பெற்றோரின் கவலையீனமே மரணத்திற்கு காரணம் எனவும் குறிப்பிட்ட மரணவிசாரணை அதிகாரி திரு. யோகலிங்கம் இயற்கை மரணம் என தீர்ப்பு வழங்கினார்.

## வயிற்று வலிதாங்காமல் தற்கொலை

(வவுனியா)

வயிற்று வலி தாங்க முடியாது இளைஞன் நஞ்சு குடித்து மரணமானார். இச் சம்பவம் வவுனியா பொலிஸ் பிரிவில் உள்ள அல்லப்பர் மருதன் குளத்தில் நடந்துள்ளது 21 வயதுடைய குழந்தைவேலு சந்தசாமி என்ற இளைஞனே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் எஸ் கே பாலசிங்கம் சாட்சிகளை விசாரித்த பின்னர் தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்.

## அங்குரார்ப்பணம்

[வவனியா]

இ. தொ. கா. பிரிவின் வவனியா மாவட்ட அபிவிருத்தி குழு ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இலங்கை காங்கிரஸ் தொழில் நிறுவன த்திடம் நிதி உதவி பெற்று வவுனியாவில் குடியேறியுள்ள மலையக மக்கள் உள்ள கிராமங்கள் அபிவிருத்திக்கு இக் குழு செயல் படவுள்ளது என அறிவிக்கப்பட்டது.

குழுவின் தலைவராக வவனியா மாவட்ட இ தொ. க. தலைவர் திரு எஸ். கே. பாலசிங்கம் செயலாளராக திரு. பி. மருதடபிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## ''நாராயணசாமி குடும்பத்தை முடிப்பதில் எனக்கு அக்கறை என்பதை மறுக்கிறேன்''

### வல்லை முக்கொலை வழக்கில் சாட்சியம்

[புலோலி]

'இச்சம்பவங்கள் எல்லாம் எனது மைத்துனர் தங்கலிங்கம் கொலை செய்யப்பட்டதனால்தான் நடைபெற்றன என என்னால் சொல்லமுடியாது. ஆனால் இதில் முதல் நடந்த கொலை தங்கலிங்கம் கொலை தான். தங்கலிங்கம் கொலை வழக்கில் நாராயணசாமியும் அவரது பிள்ளைகளுமே எதிரிகள். அக்கொலை வழக்கில் நானும் சாட்சியமளித்தேன்.''

இவ்வாறு வல்லை முக்கொலை வழக்கு 2–ம் நாள் விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த இ. தங்கராசா எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ் ஜெயசிங்கத்தால் குறுக்கு விசாரணை செய்யப்படும்போது குறிப்பிட்டார்.

இம்முக்கொலை வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகின்றது தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் சாட்சி குறிப்பிட்டதாவது;

''சம்பவத்தன்று நாராயணசாமியின் குடும்பக் கொலை வழக்கில் சந்தேகநபராக விளக்கமறியலில் கைதியாக இருந்தேன். நாராயணசாமியின் குடும்பக் கொலை வழக்கு விசாரணைக்காகவே அன்று என்னையும் ஏனைய சந்தேகநபர்களையும் யாழ். சிறைச்சாலையிலிருந்து பருத்தித்துறை மன்றிற்குக் கொண்டுவந்தார்கள்.

''சம்பவ தினம் நாங்கள் பிரயாணம் செய்துகொண்டிருந்த பஸ் உப்புவல்லைச் சந்தி பஸ்தரிப்பில் நின்றது. அப்போது 15, 20 பேர் பற்றைக்குள்ளிருந்து பஸ்ஸை நோக்கி ஓடிவந்தார்கள். அவர்களில் 9, 10 பேர் முகமூடி அணிந்திருந்தனர்.

### 16 எதிரிகளை எனக்குத் தெரியும்

''க்கொலை வழக்கின் 1ம், 2ம் எதிரிகள் தவிர்ந்த ஏனைய எதிரிகளை எனக்குச் சம்பவத்திற்குமுன்பே தெரியும். பதினாறு எதிரிகளை எனக்குத் தெரியும். சம்பவதினத்தன்று பற்றைக்குள்ளிருந்து ஓடிவந்தவர்களில் 9,10பேர் முகமூடியின்றி இருந்தார்கள் எனக் கூறினேன். அன்று நான் முகமூடியணிந்த 9, 10 பேரைக் கண்டேனே தவிர அவர்களை இன்னாரென்று எனக்குத்தெரியாது.

''சம்பவம் நடைபெற்ற இடத்தில் நான் கண்ட 5 பேரைத்தவிர ஏனையோர்களும் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டுள்ளார்களா இல்லையா என்று என்னால் சொல்லமுடியாது. நான் பஸ்ஸில் இருந்து பார்த்தபோது பற்றைக்குள்ளிருந்து பஸ்ஸை நோக்கி ஓடிவந்தவர்கள் பஸ்ஸின் அருகில் வந்து விட்டார்கள். என்னுடன்வந்த மற்ற விளக்கமறியல் கைதிகள் எந்தெந்த நிலையில் ஓடிவந்தவர்களைக் கண்டார்கள். என்று என்னால் கூறமுடியாது. மகேந்திரன் தில்லைநடராசா துரைராசா, நான் ஆகிய நால்வரும் ஒரே பஸ்ஸிலேயே வந்தோம். அந்த பஸ் உப்பு வல்லைச் சந்தி பஸ் தரிப்பில் நின்றபோதே பற்றைக்குள்ளிருந்து அவர்கள் ஓடிவந்தார்கள்.

''பஸ்சை நோக்கி ஓடிவந்தவர்களைப் பற்றி மற்றவர்கள் என்ன மாதிரிச் சொன்னார்களோ என்று என்னால் சொல்ல முடியாது பஸ்ஸை நோக்கி ஓடிவந்தவர்களை நான் பார்த்தபோது சிலர் முகமூடி அணிந்திருந்தார்கள். ஆனால் 9, 10 பேரும் முகமூடி அணிந்திருந்தார்கள் என்று என்னால் கூறிவிடவோச் செல்ல முடியாது.

இச்சம்பவங்கள் எல்லாம் எனது மைத்துனர் தங்கலிங்கம் கொலை செய்யப்பட்டதன் காரணமானது என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால் இச்சம்பவங்களில் முதல் நடந்த கொலை தங்கலிங்கம் கொலை தான். தங்கலிங்கம் கொலை வழக்கில் எதிரிகளாக இருப்பது நாராயணசாமியும் அவரது பிள்ளைகளுமே. அக்கொலை வழக்கில் நானும் சாட்சியமளித்தேன்.

''நாராயணசாமியின் பிள்ளைகளில் சிலரை இவ் வழக்கில் மாட்டுவதன் காரணமாகவே நான் நாராயணசாமியின் குடும்பத்தை முடிப்பதில் அக்கறையாக இருக்கிறேன் என்று கூறுவதை மறுக்கின்றேன்.''

சம்பவ தினம் நான் பஸ்சிலிருந்து வெளிக்கிட்டு ஓடிக்கொண்டிருந்தபோது அப்புத்துரையைக் கண்டேன். அப்போது வெடிச்சத்தங்கள் கேட்டன. நான் ஓடிக்கொண்டிருந்தேன். பயத்தினால் நான் திரும்பிப் பார்க்கவில்லை நான் முதன்முதலாகத் திரும்பிப் பார்த்தபொழுது அப்புத்துரையைக் கலைத்துக் கொண்டு வந்ததைக்கண்டேன் அவ்வேளையில் பஸ்ஸிலிருந்து அப்புத்துரை எவ்வளவு தூரத்தில் நின்றார் என எனனால் கூறமுடியாது.

''ஓடிச்சென்ற நான் தொண்டமானாறு ரோட்டிற்கு அருகில் உள்ள தோட்டத்திற்குள் இருந்த கொட்டிலுக்குள் மறைந்திருந்தேன். அவ்விடத்திலிருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் எனது வீடு இருக்கின்றது'' (அ)

## இஸ்ரேலின் யூதக் குடியேற்றம்

லண்டன், நவ, 18,

''ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட பிரதேசங்களில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் யூதக் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்காசியா உலகின் அமைதிக்கும் சமாதானத்துக்கும் விடுக்கப்பட்டுள்ள பெரும் சவாலாக அமைந்துள்ளது.

இஸ்ரேலின் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்காசியாவின் அமைதி தொடர்பாக நம்பிக்கையற்ற நிலைமையைஉருவாக்குவதாகும்''.

இவ்வாறு ஜோர்தான் மன்னர் ஹுசெயின் தெரிவித்துள்ளார். (உ)

## தமிழகத்துக்கு வெள்ளிப் பதக்கம்

புதுடில்லி, நவ, 18
புதுடில்லியில் நடைபெற்ற சர்வதேச வர்த்தக கண்காட்சி அரங்கினுக்கு சிறந்த அரங்கினுக்கான வெள்ளிப் பதக்கம் தமிழகத்துக்குகிடைத்துள்ளது

வர்த்தக கண்காட்சியில் மத்திய யூனியன் அரசு மாநில அரசுகள் கண்காட்சி அரங்குகளை வைத்திருந்தன மாநில அரசுகளின் 22 கட்சி அரங்குகளும், யூனியன் அரசின் 10 கார்பரேஷன்களும், 3 இலாகாக்களும் கண்காட்சி அரங்குகளை நடாத்தின. (உ)

## நீர்வேலி வங்கி கொள்ளை வழக்கு

(கொழும்பு)
நீர்வேலி வங்கி கொள்ளை-கொலை வழக்கு விசாரணையில் நேற்று முன்தினம்மக்கள்வங்கி வடபிராந்திய அலுவலக ஜீப் சாரதி ஜெயக்கொடி ஆராய்ச்சிலாகே விஜயரத்தின சாட்சியமளித்தார். (இ)

## உரும்பிராய் இந்து 2 வது இடம்

(உரும்பராய்)
குருநாகல் மலிய தேவ மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற, அகிலஇலங்கைப் பாடசாலைகளின் உடற் பயிற்சிப் போட்டியில் 17 வயதுக்குட்பட்டோர் ஆண்கள் பிரிவில் உரும்பராய் இந்துக்கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்று, வெற்றிக்கிண்ணத்தையும், சான்றிதழையும் பெற்றுக் கொண்டது. (உ)


மனோகரா யாழ்.நகரி
தினசரி 4 காட்சிகள்
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(வயதுவந்தவர்க்கு)

21-11-82 வரை
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
உயர்ந்த மனிதன்
(புதிய பிரதி)

ராஜா யாழ்.நகரி
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-காஞ்சனா
காதலிக்க நேரமில்லை
(புதிய பிரதி) (கலர்)

ரீகல் [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
அசோகன்-நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம், ஜி.ஆர்.
நவரத்தினம்
வண்ணம்படம்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
சவாலேசமாளி

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 4-30, 7-00, 9-30 சனி, ஞாயிறு 2-00
THE ARENA
Next:- WAY OF THE DRAGON

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்


## "அப்புத்துரையை ஐவர் வாளால் ஒங்கி வெட்டுவதைக் கண்டேன்"

### குறுக்குவிசாரணையில் சாட்சி தங்கராசா

(புலோலி)
"நான் பஸ்ஸால் இறங்கி ஓடிக்கொண்டு திரும்பிப் பார்த்தபோது ஐவர் அப்புத்துரைக்கு வாளால் ஓங்கி ஓங்கி வெட்டிக்கொண்டிருப்பதையும் துப்பாக்கியுடன் துரத்திக் கொண்டு வந்த மூவர் அவ்விடத்தில் நின்றதையும் கண்டேன். என்னை ஒருவரும் துரத்திக்கொண்டு வரவில்லை.

இவ்வாறு வல்லை முக்கொலை வழக்கு முதல்நாள் விசாரணையில் சாட்சியமளித்த இ. தங்கராசா எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம். வேலும்மயிலுவினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுகையில் குறிப்பிட்டார். இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. சட்டத்தரணி எம். வேலும்மயிலுவினால் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்பட்ட சாட்சி குறிப்பிட்டதாவது;

"இவ்வழக்குச் சம்பவம் தொடர்பாக நடைபெற்ற அடையாள அணி வகுப்பில நானும் கலந்துகொண்டேன். இரு தடவைகள் சுற்றி வந்து சந்தேக நபர்களைப் பார்த்தேன். ஆனால் ஒருவரையும் அடையாளம் காட்டவில்லை. நான் கூறிய ஐந்து நபர்களும் அடையாள அணிவகுப்பில் நிற்கவில்லை. ஆகவே நான் அடையாளம் காட்டவில்லை. அணிவகுப்பின்போது சந்தேக நபர்களைச் சுற்றிப் பார்த்தபின் சம்பவம் நடந்த இடத்தில் நின்ற ஆட்களின் ஒருவரும் அணிவகுப்பில் இல்லை என்று கூறினேன்.

சம்பவம் நடந்த இடத்தில் அந்த ஐவரையும் கண்டது எனக்கு நல்ல ஞாபகமுண்டு. அவர்களை எனக்குத் தெரியும். பெயர்களும் தெரியும். இ. சின்னப்பா, இ. இராாசா, க பரமானந்தம், நா. புகழேஸ்வரன் நா சச்சிதானந்தம் ஆகியோரே அந்தஐந்துபேருமாவர்

"சம்பவம் நடந்த 4, 5 நாட்களின் பின்பு நான் சிறைச்சாலையில்சரணந்தேன். அன்று பொலிசார் எனது வாக்கு மூலத்தைப் பதிவுசெய்தனர். அவ் வாக்குமூலத்தில் அந்த ஐவரின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளேன், இறந்தவர்கள் சம்பந்தமான மரணவிசாரணையிலும் சாட்சியமளித்தேன், அச்சாட்சியத்தில் சம்பவ இடத்தில் அந்த ஐவரையும் கண்டதாகக் கூறியுள்ளேன், இன்று கூறிய அந்த ஐவரின் பெயரைத்தான் அன்றும கூறினேன்.

### 5 பேரிடம் வாள்கள் இருந்தன

நான் ஓடிக் கொண்டிருந்த போது எனக்குப் பின்னால் அப்புத்துரையும் வந்தார் என நான் கூறியுள்ளேன். நான் அப்புத்துரையைப் பார்த்த பொழுது நான் கூறிய ஐவரும் அப்புதுரையை வாளால் வெட்டிக் கொண்டிருப்பதையும் மூன்று பேர் துப்பாக்கிகளுடன் துரத்திக் கொண்டு வந்து அவ்விடத்தில் நிற்பதையும் கண்டதாகவும் கூறியுள்ளேன். 5 பேரின் கைகளில் வாள் இருப்பதைக் கண்டேன் அவ்வாள்கள் பிடிபோடப்பட்டன. சுமார் இரண்டரை அடி நீளமானவையாக இருந்தன' இதுபற்றிப் பொலிசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்திலும் நான் குறிப்பிட்டேன்.

அப்புத்துரை வெட்டப்பட்டபோது யாரின் வெட்டு அப்புத்துரையின் மேல் விழுந்தது என்று என்னால் சொல்ல முடியாது. ஐவரும் அப்புத்துரையை ஓங்கி வெட்டினார்கள். ஆனால் அந்த வெட்டுக்கள் அப்புத்துரைக்குப்பட்டதோவென்று என்னால் சொல்லமுடியாது.

நான் மரணவிசாரணையில் சாட்சியமளித்தபோது நான் கூறிய ஐவரும் அப்புத்துரைக்கு வாளால் வெட்டுவதைக் கண்டேன் என்று கூறினேன். அதில் புகழேஸ்வரனின் பெயரையும் திட்டவட்டமாகக் கூறியுள்ளேன், புகழேஸ்வரன் கையில் வாள் இருந்ததாகவும் கூறியுள்ளேன் நாராயணசாமியின் ஆண்பிள்ளைகள் எல்லோரையும் எனக்குத்தெரியும்.

தங்கேஸ்வரன், புகழேஸ்வரன், அழகேஸ்வரன், இலங்கேஸ்வரன் ஆகியோர் நாராயணசாமியின் ஆண்பிள்ளைகள். நான் ஓடிக்கொண்டு திரும்பிப்பார்த்தபோதே இவர்கள் அப்புத்துரைக்கு வெட்டுவதைக் கண்டேன், அப்புத்துரைக்கு வெட்டுவிழும்பே து சுமார் 75 யார் தூரத்தில் நின்றவாறே நான் பார்த்தேன். அதன் பின்பும் நான் ஓடிக்கொண்டிருந்தேன்.

### தொடர்ந்து ஓட்டம்

"அப்புத்துரையை வெட்டுவதைக் கண்டபின்னர் நான் வடக்குப் பக்கமாக ஓடினேன். என்னை ஒருவரும் பின் தொடர்ந்து ஓடிவரவில்லை. அப்படி ஓடிச்சென்று தோட்டத்தை அடைந்தேன் அங்கு மூன்று நாட்களாக இருந்தேன். இந்தநாட்களில் அன்று நடந்த சம்பவத்தைப் பற்றி ஒருவரிடமும் ஒன்றும் கதைக்கவில்லை.

நான் தங்கியிருந்த தோட்டத்திலிருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் எனது வீடு இருக்கின்றது எனினும் நான் வீட்டிற்குப்போகவில்லை. நான் தங்கியிருந்த தோட்டத்தில் ஒருவிதமான வசதிகளும் இல்லாதிருந்தபோதும் பயத்தின் நிமித்தம் எனக்குப் பசியும் வரவில்லை, தாகமும்வரவில்லை. பயத்தினாலேயே தோட்டத்திலிருந்து வீட்டிற்கும் போகவில்லை.

தோட்டத்தில் மூன்று நாட்கள் இருந்து. மூன்றாவது நாள் வீட்டிற்குப்போய் அன்று வீட்டில் தங்கியிருந்து மறுநாள் சிறைச்சாலையில் சரணடைந்தேன். வீட்டில் அம்மாவையும், சகோதரிகளையும் தவிர வேறு எவரையும் நான் சந்திக்கவில்லை அங்கு ஒருவரும் வந்து என்னைப் பார்க்கவும் இல்லை.

அம்மாவின் வீட்டிலிருந்து வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையம் சுமார் இரண்டு மைல் தூரத்திலுள்ளது. பொலிசார் என்னைத் தேடுவதாகக் கேள்விப்பட்டு பயத்தினால்தான் நான் பொலிஸ்நிலையத்திற்குப் போகவில்லை. நான் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பாதுகாவலிலிருந்து தப்பிச் சென்றுள்ளமையால் பொலிசார் என்னைப் பிடிப்பார்கள் என நான் பயந்தேன்." [அ]

## மன்னார் செய்திகள்

### அரைக்கம்பத்தில்

(மன்னார்)
சோவியத் ஜனாதிபதி திரு. பிரஷ்நேவின் மறைவையொட்டி மன்னார் மாவட்டத்திலுள்ள அரசாங்க அலுவலகங்களில் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் தொங்கவிடப்பட்டிருந்தன.

கடந்த திங்கட்கிழமைவரை தேசியக்கொடிகள் அரைக்கம்பத்தில் தொங்கவிடப்பட்டிருந்தன.

### பாலர் பாடசாலை

சிலாவத்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த கூழாங்குளம் கிராமத்தில் புதிய பாலர் பாடசாலை ஒன்றை உதவி அராங்கஅதிபர் திரு நீலகண்டன் திறந்து வைத்தார். இப் பாலர்பாடசாலை உலக தரிசன இயக்கத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்டது.

### புதிய கட்டடம்

மன்னார் பறப்பான் கண்டல் ரோ. கத்தோலிக்க பாடசாலையில் ஒரு லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட புதிய பாடசாலைக் கட்டிடம் திறந்துவைக்கப்பட்டுள்ளது பாடசாலை அதிபர் திரு. சூசைப்பிள்ளை தலைமையில் விழா நடைபெற்றது. கல்வி அதிகாரி திரு கே. பாலசுப்பிரமணியம் பாடசாலைக் கட்டிடத்தை திறநதுவைத்தார்.

### தையல் பயிற்சி

மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் அரிப்பு, தலைமன்னார் இளைஞர் கழகங்களுக்கான 2 தையல் பயிற்சி நிலையங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இத்தையல் பயிற்சி நிலையத்தில் 50 யுவதிகள் பயிற்சி பெறுவதாக மன்னார் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஜனாப் ஏ. சி. ஏ. கபூர் தெரிவித்தார்.

### நடவடிக்கை

மன்னார் மாவட்ட முஸ்லீம் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் அடுத்த வருடம் முதல் மேற்கொள்ளப்படும். இதற்கு முன்னோடியாக மட்டக்களப்புக் கல்விப்பிராந்திய பணிப்பாளராகக் கடமையாற்றும் ஜனாப் எம் சரீப் மன்னார் மாவட்ட கல்விப பிராந்திய பணிப்பாளராக அடுத்தவருடம் முதல் கடமையாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட ஐ தே கட்சி அமைப்பாளரும் மன்னார் முன்னாள் எம். பி.யுமான ஜனாப் எம். எஸ். ஏ றகீம் தெரிவித்தார்.

### மாநாடு

(அரியாலை)
இலங்கைப் பல்கலைக் கழகங்களின் கிறிஸ்தவ மாணவர் மன்றங்களின் மகாநாடு கண்டியில் நடைபெற்று முடிவடைந்தது.

இந்த மகாநாட்டில் சென்னை சர்வகலாசாலைகளின் கிறிஸ்தவ மாணவ மன்றங்களின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட திரு. கே. சி. ஏபிரகாம் மகாநாடு முடிந்த பின்னர் யாழ்பாணத்திற்கு விஜயம் செய்து பல இடங்களையும் பார்வையிட்டார்.

யாழ் பல்கலைக்கழகக் கிறிஸ்தவ மாணவர் மன்றப் பிரதிநிதிகளால் இவர்களுக்கு நட்புறவு விருந்து அளிக்கப்பட்டது. இவ்விருந்தில் பல பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (அ)


வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்

"இடி அமினின் எழுச்சியும் வீழ்ச்சியும்"
Rise and Fall of IDI AMIN
புரட்சிமூலம் உகண்டாவைக் கைப்பற்றிய இரத்தவெறி பிடித்த இடிஅமினைப் பார்ப்பதற்கு இன்றே வாருங்கள்!-----
பாடசாலை மாணவர்க்கு பிரத்தியேக காட்சி மனேஜருடன் ஒழுங்குசெய்து கொள்ளலாம். போன் எண் : 22466

# ரூ. 1,00,000 வெளிநாட்டுத் துணிகள் கைப்பற்றப்பட்டன!

[மாவிட்டபுரம்]

கடத்தல் முயற்சியில் ஈடுபடுத்தப்படவிருந்த ஒரு லட்சம்ரூபா பெறுமதியான வெளிநாட்டுத் துணிவகைகளை வீடு ஒன்றிலிருந்து காங்கேசன்துறைப் பொலிசார் கைப்பற்றினர்

பலாலியைச் சேர்ந்த வீடு ஒன்றில் கடத்தல் பொருட்கள் இருப்பதாக தகவல் கிடைத்ததையடுத்து அங்கு விரைந்த காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஹெட்டியாராய்ச்சி. சார்ஜன்ட் வி. தியாகராஜா. கான்ஸ்டபிள் ஜஸ்மின் ஆகியோர் கொண்ட பொலிஸ் கோஷ்டி மேற்படி வீட்டிலிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு துணிவகைகளைக் கைப்பற்றியது.

இவை இந்தியாவுக்குக் சடத்தடபடவிருந்தவை என்றும், முதல்நாள் கடத்துவதற்காக கொண்டுசெல்லப்பட்டு எதிர்பாராதவிதமாக அவை தண்ணீரில் நனைந்துவிட்டதால் மேற்படி வீட்டில் உலர்வதற்காக இவை பரப்பிவைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பொருட்களுடன் இரண்டு வெளியிணைப்பு இயந்திரங்களும், எண்ணெய் பரல்களும் மேற்படி வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டன கைப்பற்றப்பட்ட பொருட்கள் காங்கேசன்துறை சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## ஜானகிராமன் காலமானார்

சென்னை நவ 18

பிரபல தமிழ் எழுத்தாளரும், வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான திரு. தி. ஜானகிராமன் தமது 62வது வயதில் சென்னையில் இன்று காலமானார்

தஞ்சவூரிலுள்ள கிராமமொன்றில் பிறந்த இவர் சிறுவயது முதல் எழுத்தாளர் வம்மிக்கவராக விளங்கினர். 'தி. ஜா. ரா' என்ற 3 எழுத்துக்களால் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் நெஞ்சத்தில் இடம்பெற்றிருந்தார். சாகித்திய அகடமி பரிசையும் பெற்றிருந்தார்.

30 பெரும் நவினங்களையும், சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

சமீபகாலமாக சுகயீன முற்றிருந்த இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகையில் இன்று காலமானார்.

## இன்று

(யாழ்ப்பாணம்]

பனம்பொருள் அபிவிருத்திச்சபை இன்று மாலை அரியாலையில் புதிய பனம்பொருள் சித்திரகைப்பணி நிலையம் ஒன்றை திறக்கவுள்ளது இவ்வைபவத்திற்கு பனம்பொருள் அபிவிருத்திச்சபை தலைவர் திரு. கே நடராசா தலைமை தாங்குவதுடன் பிரதம அதிதியாக பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. எம். இராமலிங்கம் கலந்துகொள்வார்.

பனைமரம் மற்றும் பனையிலிருந்து பெறப்படும் ஊமல், மட்டை, பன்னாடை போன்ற கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தித் தச்சு வேலைகளையும் இச்சித்திரக் கைப்பணி நிலையம் மேற்கொள்ளும். (கெ)

## நாட்டுக்கூத்தில் முதலிடம்

நெடுந்தீவு

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான சங்கீத, நடன, நாடகப் போட்டியில் கலந்து கொண்ட நெடுந்தீவு மகாவித்தியாலய மத்திய பிரிவு மாணவர்களின் நாட்டுக்கூத்து நிகழ்ச்சி முதலாம் பரிசைப்பெற்றுள்ளது இது அகில இலங்கை ரீதியில் நடைபெற இருக்கும் போட்டிக்குத் தகுதி பெற்றதென யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை சிபார்சு செய்துள்ளார்.

இக் கல்லூரி அதிபரும் இந்நிகழ்ச்சியின் இயக்குநருமாகிய திரு. பி. எம். ஜே. அன்ரனி, இதில் பங்கு கொண்ட மாணவர்களின் பெற்றோர் தம்முடன் ஒத்துழைத்தமைக்காக நன்றி தெரிவித்துள்ளார். (அ)

## ஆபத்தான நிலையிலிருக்கும் 'இவரை'த் தெரியுமா?

[யாழ்ப்பாணம்]

கார் விபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இனந்தெரியாத சுமார் 40 வயது மதிக்கத்தக்க நபரை அடையாளம் காணுமாறு பொதுமக்களுக்குக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பொதுநிறம் கொண்ட இவர், புள்ளிகள் போட்ட வெள்ளை ஷேர்ட்டும், வெள்ளைச் சாரமும் அணிந்திருக்கிறார்.

கோண்டாவில் சந்தியில் பஸ்ஸிலிருந்து இறங்கும் பொழுது இவர் விபத்துக்குள்ளானதாகக் கூறப்படுகிறது

கோண்டாவில்சனசமூகநிலையத்தில் விபத்து நிகழ்ந்தபோது நின்றவாலிபர்கள், இவரை உடனடியாக யாழ். ஆஸ்பத்திரியில் கொண்டு போய் சேர்த்தனராம்.

கார் சாரதியான கேதீஸ்வரன் என்பவர் சுன்னாகம்பொலிசில் காருடன் சரணடைந்துள்ளார்.

இரு கால்களும் முறிந்து, தலையில் பலத்த காயத்துடனும் சத்திர சிகிச்சையின் பின்னர் சுயநினைவற்ற நிலையில் 7ம் வார்ட்டில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

## சம்பவம்பற்றி---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நெவின் பத்மதேவா சாட்சியமளிக்கையில், "பீட்டர் புகார் செய்ததைத் தொடர்ந்து சம்பவம் நடந்த இடத்திற்கு போய்ப்பார்த்தபோது சில ஓடுகள் உடைக்கப்பட்டிருந்ததாகவும் கதவு சேதப்படுத்தப்பட்டிருந்ததாகவும் கூறினர்.

சம்பவத்தை பெரிதாக கருதாதபடியால், நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யவில்லை என்றும் கூறினர்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (க)

## அக் புரட்சி 65வது ஆண்டு பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாபெரும் அக்டோபர் புரட்சியின் 65வது ஆண்டு நிறைவுவிழாப் பொதுக்கூட்டம், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இம்மாதம் 21ம்தேதி பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

# கோஷ்டி மோதல்: 11பேர் படுகாயம்!

(மாவிட்டபுரம்)

கோஷ்டி மோதலில் பதினொரு பேர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியிலும், தெல்லிப்பழை ஆஸ்பத்திரியிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஊறணியை அடுத்துள்ள மூலை என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கோஷ்டிச்சண்டையில் பயங்கர ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் பதினொரு பேர் படுகாயமடைந்து தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் அவர்களுள் ஆபத்தான நிலையிலிருந்தவர்கள் யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டனர். இக்கோஷ்டி மோதல் தொடர்பாக காங்கேசன்துறை பொலிசார் விசாரணைசெய்துவருகின்றனர்.

## எதிர்ப்பிரசாரக் கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரான பிரசாரக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ். திறந்தவெளியரங்கில் இக்கூட்டத்தை நேற்று நடாத்துவதென்று முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் தவிர்க்கமுடியாத காரணங்களால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன

இம்மாதம் 21ம், 22ம், 23ம் திகதிகளில் மட்டக்களப்பில் சர்வஜன எதிர்ப்பு பிரசாரக் கூட்டங்களை கூட்டணி நடாத்தவுள்ளது.

திறந்தவெளியரங்கில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கலந்துகொள்ளும் சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவான பொதுக்கூட்டம் இம்மாதம் 26ம் திகதி இரவு நடைபெறவுள்ளது. (மா)

## கத்தோலிக்க---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்டமை,

"சில தவறான வதந்திகளையும் தப்பான செய்திகளையும் சில பத்திரிகைகள்மூலம் பரப்பியமை,

"கத்தோலிக்க உயர் அதிகாரிகளையோ தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையோ, சட்ட அறிஞர்களையோ கைது செய்யப்பட்ட குருமாரைச் சந்திக்கவோ, சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளவோ அனுமதி வழங்கப்படாமை ஆகிய காரணங்களை முன்வைத்து யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் தலைமையில் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் ஒரு நாள் அடையாள பகிஷ்கரிப்பை நடத்தினர்" என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## பொலிஸ்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

...த்துக்கும் வவனியா, மன்னர், முல்லைத்தீவு ஆகிய இடங்களிலுள்ள கச்சேரிகளுக்குமிடையே நேரடித்தொலைபேசிச்சேவை ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## சந்தேகநபர்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம்பாபிள்ளை சுட்டுக்கொலை செய்யப்பட்டதினம் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட இராணுவத்தினரால் சுன்னாகம் பொலிஸ் பகுதியில் வைத்து சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக பொலிசில் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இது சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட ஆயுள்வேத டாக்டர் பரராசசேகரம் விசாரணையின்பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலயத்தில் இவரின் விசாரணைகள் பதிவு செய்யப்பட்டதுடன் புகைப்படமும் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலோலியைச்சேர்ந்த இவர் புத்தூருக்குச் செல்லும்போது கைதுசெய்யப்பட்டார். [மா]


✶ வெளிநாட்டுப் பயணமா?

யாழ்ப்பாணத்திலேயே குறைந்த கட்டணத்தில் எந்த நாட்டிற்கும் விரும்பிய விமானத்தில் செல்ல

★ விமான டிக்கட்டுகள்

★ பிரயாண காசோலைகள் (AMERICAN EXPRESS TRAVELLER CHEQUES)

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

மக்கின்னன் டிறவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

த. பெ. எண் 92, தொலைபேசி: 24154


# கலைப்பீட மாணவர் ஒரு நாள் அடையாள பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம் ஒருநாள் அடையாள பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் நேற்று விரிவுரைகளில் கலந்துகொண்டார்கள்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிக மாணவ மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட வர்த்தக முகாமைத்துவ மாணவர்கள் தமது நியாயமான கோரிக்கைகளுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகம் சுமுகமான தீர்வுகாணாததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக ஆம் மாணவர்கள் சார்பாக தமது கோரிக்கைகளை முன்வைத்து நேற்று ஒருநாள் அடையாள பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தமது பகிஷ்கரிப்பின்போது பின்வரும் கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர்.

ஏற்கனவே நிறுவப்பட்ட வர்த்தகத் துறையை உடனடியாக செயல்படவைத்தல்

முகாமைத்துவ கல்வி மயில்பவர்களுக்கு விஞ்ஞானமானி வியாபார - நிர்வாகப் பட்டத்தை வழங்குதல்,

வர்த்தகபீடம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,

வர்த்தகதுறை மாணவர் மீது ஏனையதுறையின் ஆக்கிரமிப்பை நிறுத்தல்

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.